
நவதிருப்பதி

ஸ்தல வரலாறு



Rs 20/-

108 திவ்விய தேசங்களுக்கு எளிதாகசெல்லும் வழி

9 திருக்கோவில்கள் வரலாறு அடங்கியது

நவகைலாய திருத்தலங்கள் (தூத்துக்குடி - திருநெல்வேலிமாவட்டம்)

வ. எண்.	ஊர்	சுவாமி	அம்பாள்	தொடர்பு தொலைபேசி எண்
1.	பாபநாசம் சூரியன்	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ உலகாம்பிகை அம்பாள்	சதாசிவம் பட்டர் செல்: 94423 17827
2.	சேரன்மகாதேவி சந்திரன்	ஸ்ரீ அம்மைநாதர்	ஸ்ரீ ஆவுடைநாயகி அம்பாள்	சந்திரசேகர் பட்டர் செல்: 94422 26511
3.	கோடகநல்லூர் செவ்வாய்	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ சிவகாமி அம்பாள்	G.சுரேஷ் செல்: 96597 28621
4.	குன்னத்தூர் ராகு	ஸ்ரீ கோத பரமேஸ்வரர்	ஸ்ரீ சிவகாமி அம்பாள்	சந்துரு பட்டர் செல்: 94420 18567
5.	முறப்பநாடு குரு	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ சிவகாமி அம்பாள்	K.செல்லப்பா செல்: 98425 16789
6.	திருவைகுண்டம் சனி	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ சிவகாமி அம்பாள்	ஐயப்பன் பட்டர், குரு பட்டர் 94873 85298 • 97917 64392
7.	தென்திருப்பேரை புதன்	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ அழகிய பொன்னம்மை	மீனாட்சி சுந்தரம் பட்டர் செல்: 98945 52943
8.	இராஜபதி கேது	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ சௌந்திர நாயகி பொன்னம்மாள்	திரு. லட்சுமணன் அர்ச்சகர் செல்: 97873 82258
9.	சேர்ந்த பூமங்கலம் சுக்கிரன்	ஸ்ரீ கைலாசநாதர்	ஸ்ரீ சௌந்தர் நாயகி	மணிகண்டன் செல்: 99404 69154

108
திவ்விய தேசங்களுக்கு

எங்கு செல்ல வேண்டும். எப்படி செல்ல வேண்டும்
என்ற எளிதான விவரங்கள் அடங்கியது.

ஸ்ரீ நம்மாழ்வாரால்
மங்களாஸாஸனம் செய்யப்பட்ட

நவதிருப்பதி

ஸ்தல வரலாறு

இந்த புத்தகம் நவதிருப்பதி ஸ்தலங்களில்
மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.

V.R.K. பப்ளிகேஷன்ஸ்
16, வியாசர் தெரு, வடக்கு உஸ்மான் ரோடு,
சென்னை – 19.

நவதிருப்பதி

முன்னுரை

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும், சமூக வாழ்வையும் ஒழுங்கு முறைக்குட்படுத்துவதே ஆன்மீகம். உலகம் முழுவதும் ஆன்மீகமானது பல்வேறு மதம் மற்றும் சம்பிரதாயம் ஆகியவற்றின் நடைமுறை வழியாக தன் பணி செய்கின்றது. மனித குலத்தை பண்படுத்துவதே ஆன்மீகத்தின் அடிப்படை நோக்கம். நம் பாரத நாடு ஆன்மீக வழியிலான பண்பாட்டு ரீதியில் பல்வேறு புராதனமான நடைமுறைகளை தன்னகத்தே கொண்ட பெருமைகளையுடையது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயமும், ஸ்ரீராமனுஜரும் பன்னிரு ஆழ்வார்களும் இவரது படைப்புகளம் ஆன்மீக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மகாவிஷ்ஸ பல்வேறு திருநாமங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிகின்ற திருத்தலங்களில் பன்னிரு ஆழ்வார்களால் மங்களாஸாஸனம் செய்விக்கப்பட்ட (வரவேற்று போற்றப்பட்ட) 108 திவ்விய தேசமும் முக்கியமானது.

பரமபதம் திருப்பாற்கடல் நீங்கலாக 106 தலங்களும் பாரத தேசத்தில் பரவலாக அமைந்துள்ளது.

இத்திருத்தலங்களில் சோழநாட்டில் 40, தொண்டை நாட்டில் 22, பாண்டிய நாட்டில் 18, மலை நாடு 13, வட நாடு 11, நடு நாடு 2 என அமையப் பெற்றுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு. பாண்டிய நாட்டில் அமைந்துள்ள 2 திருப்பதிகளில் தாமிரபரணி நதியின் இருபுறமாக அமைந்துள்ள 9 திருத்தலங்களுலே நவதிருப்பதி என்று அழைக்கப்படுகின்றது.

அவையாவன :

1) திருவைகுண்டம் 2)திருவரகுணமங்கை (நத்தம்)
3) திருப்புளியங்குடி 4) இரட்டை திருப்பதி
5) பெருங்குளம் 6) தென்திருப்பேரை
7) திருக்கோளூர் 8) ஆழ்வார்திருநகரி .

ஆழ்வார்திருநகரியில் வைகாசி மாத் நம்மாழ்வார் திருநட்சத்திரமான விசாகத்தை ஒட்டி ஆண்டுதோறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருநாளில் ஐந்தாம் திருநாளன்று நவதிருப்பதி பெருமாளும் ஆழ்வார்திருநகரி எழுந்தரளி நம்மாழ்வாரால் மங்களாஸாஸனம் செய்கின்றார். அன்று இரவு ஒன்பது பெருமாளும் கருட வாகனத்திலும் நம்மாழ்வார் அன்னவாகனத்திலும் மதுரகவி ஆழ்வார் பரங்கி நாற்காலியிலும் எழுந்தருளி ஒன்று சேர்ந்து வீதி உலா செய்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். இந்நாளில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நாடு முழுவதிலும் இருந்து இங்கு வந்து பெருமாளின் திருவருளைப் பெறுகின்றனர்.

நவதிருப்பதியின் ஒவ்வொரு திருக்கோவில்களிலும் தனி வரலாறை பின்வரும் பக்கங்களில் இப்புத்தகத்தில் காணலாம்.

31/2

1. திருவைகுண்டம் (சூரியன்)

இத்தலம் திருநெல்வேலி திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் திருநெல்வேலியிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் ஆற்றின் வடகரையில் உள்ளது. பேருந்து வசதி, புகைவண்டி வசதியும் இருக்கிறது. 15.5.96 அன்று மகா சம்ப்ரோஷணம் (கும்பாபிஷேகம்) நடைபெற்றது.

தல வரலாறு : பிரம்மன் எழுந்தருளியுள்ள சத்திய லோகத்தில் ஒரு சமயம் பிரளையம் ஏற்பட்டு எங்கும் நீர் சூழ்ந்து கொண்டு இருந்த காலத்தில் சோமுகாசுரன் என்ற அரக்கன் பிரம்ம தேவன் வைத்திருந்த (சிருஷ்டி ரகசிய கிரந்தம்) படைப்பு தொழில் பற்றி கசிய ஏடுகளை ஒளித்து வைத்துக் கொண்டான். தன் நிலை வருந்திய பிரம்மா அதனை அவனிடமிருந்து மீட்கும் பொருட்டு விஷ்ணுவை குறித்து தவம் செய்ய எண்ணி தன் கையில் உள்ள பிரம்ம தண்டத்தை பெண்ணாக்கி தவம் செய்யும் இடத்தை அறிந்து வரச் சொல்ல அதுவும் தாமிரபரணி ஆற்றங்கரையில் சோலைகள் நிறைந்த இடத்தை தேர்வு செய்து கூற பிரம்மன் அங்கு வந்து கடுத்தவம் செய்து திருமால் நேரில் அங்கு வந்து பிரம்மனை வாழ்த்தி இழந்த ரகசியத்தை மீட்டுக் கொடுத்தார். திருமாலிடம் பிரம்மன் தனக்கு காட்சி கொடுத்த நின்ற திருக்கோளத்திலேயே இங்கு வைகுண்டநாதனாக காட்சியளிக்க வேண்டும் என வேண்ட அவரும் சம்மதித்தார். மூல விக்கிரகத்தை பிரம்மனே பிரதிஷ்டை செய்து தன கமண்டத்திலேயே நீர் எடுத்து திருமஞ்சனம் செய்து கலசத்தை நதிக்கரையில் பிரதிஷ்டை செய்தல் தீர்த்தம் கலச தீரத்தம் எனப்படுகிறது.

கால தூஷகன் என்னும் திருடன் ஒருவன் இப்பெருமானை வழிபட்டு திருடச் செல்வானாம். திருடிய செல்வத்தில் பாதியை பெருமாளுக்கு காணிக்கையாகவும் தருவான். இவன் கூட்டத்தினர் அரண்மனையில் திருடுகையில் பிடிபடும் பொழுது கால தூஷகன் வைகுண்ட நாதனிடம் சரண் அடைந்து தன்னை காக்குமாறு வேண்ட பெருமாளே காலதூஷகன் வேடத்தில் எதிரில் வர காலதூஷகனை அரசன் பார்த்த போது தன் சுயரூபத்தை காட்டிய்ருள அடிபணிந்து நின்ற மன்னன் தன்னிடம் கொள்ளையடித்து செல்ல வேண்டிய காரணம் கேட்க தர்மம் காக்காத உன்னை தர்மத்தில் ஈடுபட செய்யவே நான் வந்தேன் என்றார். அரசனும் தனக்கு கிடைத்த பாக்கியம் மக்களுக்கும் கிடைக்க உட்சவ மூர்த்தியை கள்ளபிரான் என்று கூறி வழிபடலானார்.

இக்கோவிலின் அமைப்பு முழுவதும் சில காலத்திற்கு முன் பூமியில் புதையுண்டு போனது பின்னர் மணப்படை வீட்டை தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டியமன்னனின் பசுக்களை இங்கு ஓட்டி வந்து மேய்ப்பது வழக்கம். இதில் ஒரு பசு மட்டும் தனித்து பெருமாள் பூமியில் மறைந்து உள்ள இடத்தில் பால் சொறிவதை வழக்கமாக கொண்டிருந்தது. இதனை மேய்ப்பவன் மன்னனிடம் கூற மன்னன் தனது பரிவாரங்களுடன் அங்கே வந்து மணலை அகற்ற அங்கே வைகுண்ட பெருமாள் சன்னதியை கண்டு ஆனந்தித்து இப்பொழுதுள்ள கோவிலை அமைத்தார். இத்தலத்தில்

பெருமாளை சூரிய ஒளி ஆண்டிற்கு இருமுறை சித்திரை 6, ஐப்பசி 6 ஆகிய நாட்களில் காலைக் கதிரவன் பெருமாளின் பாதத்தை தரிசித்து செல்கிறான். இதற்காக கொடி மரம் சற்று தெற்கே விலகி அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள கோபுரம் சநதிர குல பாண்டியனால் கட்டப்பட்டது. வீரப்பன் நாயக்கர் காலத்தில் கொடி மரமும், சந்தான சபாபதி காலத்தில் மண்டபமும் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான கலை அம்சம் உள்ள கோவில் இங்கு உள்ள உற்சவரனி திருமேனியை உருவாக்கிய சிற்பி இவர் அழகில் மயங்கி கன்னத்தில் கிள்ள சிற்பியன் ஆத்மாத்தமான அன்பின் அடையாளத்தை கன்னத்தில் வடுவாக ஏற்றுக் கொண்டார். இன்றும் இந்த வடுவை உற்சவரிடம் காணலாம்.

மூலவர் – வைகுந்தநாதன் – நின்ற திருக்கோலம், கிழக்கு பார்த்த திருமுக மண்டலம், (மூலவருடம் தாயர் கிடையாது) உற்சவர் – கள்ளபிரான். தாயார் – வைகுண்டவல்லி, பூதேவி (தனி சன்னதி) தீர்த்தம் – பிருகு தீர்த்தம், தாமிரபரணி நதி. விமானம் – சந்திரவிமானம்
பிரத்யட்சம் – பிருகு சக்கரவர்த்திக்கும், இந்திரனுக்கும் – ஆகமம் – பாஞ்சராத்ரம் – சம்பிரதாயம் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

புளியங்குடி கிடந்து வரகுண மங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே என்னை ஆள்வாய் எனக்கு அருளி,
நலிந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப நாங்கள்கூத்தாடி (நின்(று) ஆர்ப்ப,
பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் கனிவாய் சிவப்ப நீ காண வாராயே

2. திருவரகுணமங்கை (நத்தம்) (சந்திரன்)

நத்தம் என்ற பெயரே வழக்கில் உள்ளது. ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் கிழக்கே வந்தால் இத்திருதலத்திற்க வரலாம். பேருந்து வசதி உள்ளது. குக்கிராமம். இப்பொழுது தேவபிரசன்னத்தில் கோவில் அருகிலேயே புஷ்கரணி இருப்பதாய் கண்டு புதைத்திருந்த புஷ்கரணியை தோண்டி சீர் செய்து உள்ளார்கள். 20.10.96 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தல வரலாறு : முன்னோரு காலத்தில் ரேவா நதிக்கரையில் புன்னிய கோஷம் என்னும் அக்கிராகாரத்தில் 'வேதவி என்பவர் தன் மாதா, பிதா, குரு மூவருக்குரிய கடன்களை முடித்து திருமாலை நோக்கி ஆஸனத்தை என்னும் மந்திரத்தை ஜெபித்து தவமிருக்க எண்ணியிருக்கையில் அவனிடம் திருமால் கீழ பிராமண வேடத்தில் வந்து ஆஸனதை மந்திரம் ஜெபிக்க வரணகுண மங்கைதான் சிறந்தது என்று கூற அவர் இங்கு வந்து கடுந்தவம் செய்து திருமாலின் அருள் பெற்று பரமபதம் அடைந்தார். ஆஸன மந்திரம் ஜெபித்து இறைவன் காட்சியளித்த இடமாதலால் விஜயசானர் என்னும் திருநாம் திருமாலுக்கு உண்டானது. பிரம்மாவின் கர்வத்தை அழித்த ரோமேசமகரிஷிக்கும் சத்தியத்தால் கணவனின் உயிர் மீட்ட பஞ்ச கன்னிகைகளில்ஒருத்தியான சாவித்திரிக்கும் அதர்மத்தையும், அக்கிரமத்தையும் கட்டுப் பொசுக்கும் அக்கினி தேவனுக்கு காட்சியளித்த

இடம், இம்மூவருக்கும் சத்தியத்திற்கு ஜெய்ம் அளிப்பவனாக, சத்திய நாராயணனாக ஆதி சேடன் குடைபிடிக்க சத்தி ஜெயவிஜயங்களை தன் ஆசனமாகக் கொண்டு விஜயாசனர் என்னும் திருநாமம் பெற்று வீற்றிருந்த திருக்கோலத்தில் பரமபத சேவை தந்தருளும் தலம். இத்திருப்பதியில் உயிர் நீத்தால் மோட்சம் கிட்டும் என ரோமேச முனிவர் கூறியுள்ளார்.

மூலவர் – விஜயாசனபெருமாள் – ஆதிசேஷன் குடைபிடிக்க வீற்றிருந்த கோலம் கிழக்கு பார்த்த திருமுக மண்டலம். தாயார் – வரகுணவல்லித் தாயர், வரகுண மங்கைத் தாயர் (தனி சன்னதி இல்லை). தீர்த்தம் – அக்னி தீர்த்தம் தேவ புஷ்கரணி. விமானம் – விஜயகோடி பிரத்யட்டசம் – அக்னி, ரோமேச முனிவர், சத்தியவான் முதலியவர்க்கு

ஆகமம் – வைகானஸம். சம்பிரதாய் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

புளியங்குடி கிடந்து வரகுண மங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே என்னை ஆள்வாய் எனக்கு அருளி,
நலிந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப நாங்கள்கூத்தாடி (நின்(று) ஆர்ப்ப,
பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் கனிவாய் சிவப்ப நீ காண வாராயே

பாடல் 3571

3. திருப்புளிங்குடி (புதன்)

திருவரகுணமங்கையிலிருந்து அதே சாலையில் கிழக்கே அரை கி.மீ.யில் உள்ளது இத்திருத்தலம். பேருந்து வசதி இருக்கிறது. இங்கு பெருமாளின் திருஉத்தியிலிருந்து பிரம்மா சேவை சாதிக்கிறார். 15.5.96 அன்று மகா சம்ப்ரோஷணம் (கும்பாபிஷேகம்) நடைபெற்றது.

தல வரலாறு : ஒரு சமயம் திருமால் இலக்குமி தேவியுடன் இந்நதிக் கரையில் தனித்திருந்த பொழுது பூவுலகுக்கு வந்தும் தன்னை ஒதுக்குகினிறாரோ என பூமாதேவி சினங்கொண்டு பாதாளலோகம் செல்ல பூமி இருண்டு வறண்டது. தேவர்கள் எல்லாம் திருமாலை வழிபட அவரும் இலக்கும் தேவியுடன் பாதாள லோகம் சென்று பூமாதேவியை சமாதானம் செய்து இருவரும் சமமே என்று கூறி நட்புண்டாக்கி இரு தேவிமார்களுடன் இங்கே காட்சியளிக்கிறார். பூமி தேவியை சமாதானம் செய்து பூமியை காத்ததால் பூமிபாலகர் என்ற திருநாமமும் ஏற்பட்டது.

இமயமலையில் மானுருவில் ரிஷியும், ரிஷிபத்தினியும் கொஞ்சி கொண்டிருக்க அங்கே வந்த இந்திரன் மானுருவில் இருந்த ரிஷியை தனது வஜ்ராயுதத்தால் அடித்து வீழ்த்தி பிரம்மஹத்தி தோஷத்திற்கு ஆளானார், வியாழ பகவானின் யோசனைப்படி இந்திரன் இங்கு வந்து பூமி பாலனை வேண்டி தீர்த்தத்தில் நீராட பரமஹத்தி தோஷம் நீங்கியது. தனது சாபவிமோசனத்தில் மகிழ்ந்த இந்திரன் திருமாலை நோக்கி பெரிய யாகம் செய்து வசிஷ்டரின் மகளையும் அவருடன் வந்த ரிஷிகளையும் மதிக்காமல் கடுஞ்சொற்கால் வஞ்சிதத அரக்கனாக சபிக்கப்பட்ட யக்ஞசர்மாவிற்கும்.

திருமால் தோன்றி சாபவிமோசனம் அளித்தார். இங்கே பெருமாள் ஆதிசேஷன் மீது 12 அடியில் பள்ளி கொண்டுள்ளார். சயனப் பெருமாளின்

திருப்பாதத்தை மூலஸ்தானத்தை சுற்றி வரும் போது உள்ள ஜன்னல் வழியே தரிசிக்கலாம். பெருமாள் நாபியியல் இருந்து ஒரு தாமரைக்கொடி சுவரில் பிரம்மன் வீற்றிருக்கும் தாமரையுடன் சேருகின்றது. இவர் மேனிக்கு எண்ணெய் காப்பு செய்ய 250 லிட்டர் உபயோகிக்கப்படுகிறது. இலக்குமியுமியும் பூமாதேவியும் பெரிய உருவங்களாக பெருமாளின் திருப்பாதத்தில் அமர்ந்துள்ளனர். இங்கு குழந்தைப் பேறுக்காக செய்யப்படும் பிரார்த்தனைகள் பொய்ப்பதில்லை.

மூலவர் – காய்சினவேந்தன், புஜங்கசயனம் கிழக்குப் பார்த்த திருமுக மண்டல். உற்சவர் – எம் இடர்களைவான். தாயார் – மலர்மகள், திருமகள் (பெரிய திருவுருவங்கள்) புளியங்குடிவல்லி என்ற உஸ்தவதாயாரும் உண்டு) தாயார்களுக்கு தனி சன்னதி இல்லை தீர்த்தம் – வருணநீருதி தீர்த்தம், விமானம் – வதசார விமானம், பிரத்யட்சம்– வர்ணம் நீருதி, தர்மராஜன். ஆகமம் – வைகனாஸம், சம்பிரதாயம் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

பண்டை நாளாலே நின் திரு அருளும் பங்கையத்தாள் திரு அருளும்
கொண்டு, நின் கோயில் சீய்த்துப்பல் படிகால் குடி குடி வந்து
ஆட்செய்யும் தொண்டரோர்க் (கு) அருளிச் சோதி வாய் திறந்துன்
தாமரைக் கண்களால் நோக்காய்.
தென்டீரைப் பொருநல் தன்பணை சூழ்ந்தனை திருப்புளியங்குடி
கிடந்தானே

பாடல் 3566

புளியங்குடி கிடந்து வரகுண மங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே என்னை ஆள்வாய் எனக்கு அருளி,
நலிந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப நாங்கள்கூத்தாடி (நின்(று) ஆர்ப்ப,
பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் கனிவாய் சிவப்ப நீ காண வாராயே

பாடல் 3571

கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம் கிடத்தியுள் திருஉடம்பு அசைய,
தொடர்ந்து குற்றவேல் செய்து கொல்லடிமை வழிவரும்
தொண்டரோர்க் கருளி,
தடங் கொள்தாமரைக் கண்விழித்து நீ எழுந்தன் தாமரை மங்கையும் நீயும்,
இடங்கொள் மூவுலகும் தொழவிருந்த தருளாய் திருப்புளியங்குடி
கிடந்தானே பாடல் 3570

4. பெருங்குளம் (சனி)

திருப்புளியங்குடியில் இருந்து அதே சாலையில் கிழக்கே 5 கிலோ மீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. பேருந்து வசதி உண்டு. கருடன் (ஆடல் பறவை) ஏக ஆசனதில் உஸ்தவருடன் எழுந்தருளியுள்ளார். வாசத்தடம் என்ற குளம் தேவபிரசன்னத்தில் கண்டுபிடிக்கப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது. கோவிலின் தென்புறத்தில் கழுநீர் தொட்டியான் என்னும் சன்னதி உள்ளது. திருமடப்பள்ளியிலிருந்து வரும் பிரசாத கழிவுநீர்

இவர் பாதம் வழியாக செல்கிறது. 9.12.98ல் மகாசம்ப்ரோஷணம் (கும்பாபிஷேகம்) நடைபெற்றது.

தல வரலாறு : இங்கு வசித்து வந்த வேதசாரண் குமுத வல்லி தம்பதியினரின் தவப்புதல்வியான கமலாவதி மானிடர் யாரையும் மணந்து வாழ மாட்டேன். இப்பெரு மாளையே மணம்புரிவேன் என்று கடும் தவம் கொண்டாள். பெருமாளும் நேரில் தோன்றி அவளின் ஆசைப்படி தன் மார்பில் ஏற்றுக்கொண்டார். இன்றும் இப்பெருமாளின் நெஞ்சில் கமலாவதியைக் காணலாம். இதனால்தான் பெரும்பாக்கியம் அடைந்ததாக நினைத்த வேதசாரண வேங்கடவானுக்கு நித்ய ஆராதனை செய்து வந்தார். இவ்ரின் மனைவி குமுதவல்லி நீராட செல்லும் போது அச்மசாரன் என்னும் அரக்கன் அவளை கவர்ந்து சென்று இமயத்தில் சிறை வைத்தான். இதை அறிந்த வேதசாரண் பெருமாளிடம் அருள்புரிய வேண்டினார். பெருமாளும் குமுதவல்லியை இமயமலையிலிருந்து தனது கருட வாகத்தில் மீட்டு வந்தார். அச்மசாரன் இங்கு வந்து பெருமாளுடன் போர்புரிய அவன் மீது நர்த்தனம் செய்து அவனை வதம் செய்தார்.இதனால் பெருமாளுக்கு ஸோர (அரக்கன்) நாட்டியன் தமிழில் மாயக்கூத்தன் என்ற திருநாமம் ஏற்பட்டது. தனக்கு உதவிபுரிந்த கருடனுக்கு உஸ்தவமூர்த்தியுடன் ஏக ஆசனம் அளித்துள்ளார்.

மூலவர் – வேங்கடவானன் நின்ற திருக்கோலம் கீழக்கு பார்த்த திருமுகமண்டலம். உற்சவர் – மாயக்கூத்தன். தாயார் – அலர்மேலு மங்கை, குள்ந்தை வலலி – (தனி சன்ந்தி இல்லை) தீர்த்தம் – பெருங்குளம் விமானம் – ஆனந்த நிலையம். பிரத்யட்சம் – பிரகஸ்பதிக்கு. ஆகமம் – வைகானஸம். சம்பிரதாயம் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

கூடச்சென்றேன் இனி என் கொடுக்கேன்?- கோள்வளை நெஞ்சத்
தொடக்க மெல்லாம்,
பாடற்றொழிய இழந்து வைக்ல் பல்வளை யார்முன் பரிசழிந்தன்
மாடக்கொடிமதின் தென்குளத்தை வண்குட பால் நின்ற மாயக்கூத்தன்
ஆடல் பறவை உயர்த்த வெல்லோர் ஆழிவலவனை ஆதரித்தே
பாடல் 3461

5. திருத்தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி)

பெருங்குளத்திலிருந்து கிழக்கே 0.5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மங்கலக்குறிச்சி வந்து வடகால் என்ற வாய்க்கால் கரை வரியாக மேற்கு நோக்கி 4 கி.மீ பாதையில் வந்தால் இத்திருத்தலத்தை அடையலாம். காட்டுக் கோயில் வீடுகளே கிடையாது. இருகோவில்களும் அருகருகே அமைந்துள்ளன. இத்திருத்தலும் வடக்கு கோவில் எனப்படுகிறது. இத்திருத்தலங்களுக்கு மேற்கே ஒன்றரை கி.மீ. தொலைவில் நம்மாழ்வார் அவதரித்த அப்பன் கோயில் உள்ளது.

தெற்கு கோவில் தலபுராணம் (ராகு)

ஆத்ரேயசுப்ரபர் என்ற ரிஷி யாகம் செய்வதற்காக இத்தலத்திற்கு வந்து யாகம் செய்யும் இடத்தை சுத்தம் செய்யும் பொழுது பூமியில் புதையுண்ட மிக ஒளிமயமான ஒரு வில்லும், தராசையும் கண்டார். அவைகளை கையில்

எடுத்தவுடன் வில் ஆணாகவும், தராசு பெண்ணாகவும் மாறியது. இருவரும் குபேர சாபத்தால் வில்லாகவும், தராசாகவும் மாறி இத்தல மண்ணில் புதையுண்டு கிடந்தோம் என கூறி பரமபத முக்தி அடைந்தனர். எனவே இத்தலம் தொலைவில்லி மங்கலம் எனப் பெயர் பெற்றது.

சுப்ரபர் யாகத்தை வெகுவிமர்சையாக நடத்தி அதில் திரண்டு வந்த பலனை அவிர்ப்பாகமா தேவர்களுக்கும் கொடுத்தார். அவிர்பாகம் கிடைத்த மகிழ்ச்சியில் தேவர்களும் சுப்ரருடன் திருமாலை வேண்ட திருமால் அங்கு காட்சியளித்தார். அதனால் மூலவர் தேவர்பிரான் என அழைக்கப்படுகின்றார். பூமிக்கு அதிபதியாகிய இந்திரனுக்கும், நீருக்கு அதிபதியான வருணனுக்கும், வாயு பகவானுக்கும் காட்சியளித்த இடம் இது.

தெற்கு கோவில்

மூலவர் – தேவர்பிரான் நின்ற திருக்கோலம் கிழக்கு பார்த்த திருமுக மண்டலம். தாயார் – உபதாயார்களுக்கு தனி சன்னதி இல்லை. தீர்த்தம் – வருண தீர்த்தம் தாமிரபரணி நித். விமானம் – குமுத விமானம். பிரத்யட்சம் – இந்திரன் வாயு வருணன். ஆகமம் – வைகானஸம்.

வடக்கு கோவில் தல வரலாறு (கேது)

தேவபிரான் சன்னதியில் யாகம் முடித்து சுப்ரபர் தினந்தோறும் வடக்கு பக்கத்தில் இருந்த தடாகத்தி லிருந்து தாமரை மலர்களை கொய்து வந்த தேவபிரானை வழிபட்டு வந்தார். தினமும் இத்தகைய அழகு மலர்களை எங்கிருந்து எடுத்து வருகின்றார் என்று பார்க்க பெருமாள் சன்னதிக்கு வடக்கே நின்று பார்த்தார். மலர்களுடன் வந்த சுப்ரபர் பெருமாளை பார்த்து தன்னை பின் தொடர காரணம் கேட்டபொழுது. உம்முடைய செந்தாமரை புஷ்ப பூஜைக்கு மயங்கி இங்கே இருந்தோம். எனக்கும் தேவபிரானோடு சேர்ந்து அபிஷேகம், அர்ச்சனை செய்யுமாறு கூறினார். சுப்ரபர் பெருமாளின் வேண்டுகோளின்படி பெருமாளை பிரதிஷ்டை செய்து இரு கோவில் களுக்கும் நாள் தவறாமல் பூஜை செய்து வந்தார். தனக்கு தாமரைப்பூவினால் அர்ச்சனை செய்பவரின் சகல பாவங்களையும் நீக்கிஅருள் தருவேன் என்று கூறினார். இந்த பெருமாளை அஸ்வினி, தேவர்கள் தங்களுக்கு அவிர்ப்பாகம் வேண்டி, பூமியில் வைத்திய சாஸ்திரம் பின்பற்றாததாலும் பிரம்மிடம் முறையிட இப்பெருமாளை நோக்கி வழிபட்டு பெருமாளை தாமரை மலரை கையில் கொண்டு காட்சியளித்து குறை நீக்கினார். அஸ்வினி, தேவர்கள் மருத்துவத்தின் தலைவர்கள் கங்கை நதிக்கரையில் வாழ்ந்த விபீதகன் என்றவன் இந்த தீர்த்தத்தில் நீராடி தனது குஷ்ட நோயை போக்கியதால் அவன் நெடுங்காலம் இத்தலத்தில் தங்கி இரு பெருமாளுக்கு தொண்டு செய்ததாக வரலாறு. இத்தலத்தில் தான் பெருமாளோடு தாயாரையும் நம்மாழ்வார் மங்களாஸாஸனம் செய்துள்ளார்.

மூலவர் – அரவிந்தலோசனன், வீற்றிருந்த திருக்கோலம் கிழக்கு பார்த்த திருமுக மண்டலம். உற்சவர் – செந்தாமரைக் கண்ணன். தாயார் – கருத்தடங்கண்ணி. தீர்த்தம் – வருணை தீர்த்தம் தாமிரபரணி – பிரத்யட்சம் – இந்திரன், வாயு, வருணன். ஆகமம் – வைகானஸம். சம்பிரதாயம் – தென்கலை. விமானம் – குமுத விமானம்.

துவளில் மாமணி மாடம் ஓங்கு தொலைவில்லி மங்கலம் தொழும்
இவளை, நீர் இனிஅன்னைமீர் உமக்கு ஆசை இல்லை விடுமினோ
தவள ஒண்சங்கு சக்கரம் என்றும், தாமரை தடங்கண் என்றும்,
குவளை ஒண் மலர் கண்கள் நீர்மல்க நின்று நின்ரு குமுருமே

பாடல் 3271

சிந்தையாலும் சொல்லாலும் செய்கை னாலும் தேவபிரானையே
தந்தை தாய் என்றடைந்து வண்குரு கூர வர் சடகோபன் சொல்
முந்தை ஆயிரத்துள்ளி இவை தொலை, வில்லி மங்கலத்தைச் சொன்ன
செந்தமிழ் பத்தும் வல்லர் அடி மை செய்வார் திருமாலுக்கே

பாடல் 3281

6. தென்திருப்பேரை (சுக்ரன்)

தாமிரபரணிக் கரையின் தென்கரையில் திருநெல்வேலி – திருச்செந்தூர் சாலையில், திருநெல்வேலியிலிருந்து 35 கி.மீ. ல்இத்தலம் உள்ளது. பேருந்து வசதி உண்டு. 16.6.95 அன்று மகா சம்ப்ரோஷணம் (கும்பாபிஷேகம்) நடைபெற்றது.

தல வரலாறு : ஸ்ரீமத் நாராயணன் திருமலை விடுத்து பூமா தேவியிடம் அதிக ஈடுபாடு கொண்டதாக நம்பிய திருமகள் துர்வாச முனிவரிடம் பூமா தேவியை போல்தான் அழகு இல்லாத காரணத்தால் ஸ்ரீமந் நாராயணனே தன்னை வெறுக்கின்றார். அதனால் அவளை போன்றே தனக்கும் அழகும் திறமும் வேண்டும் என கேட்டார். துர்வாசரும் பூமிதேவியை காண வந்த பொழுது திருமாலின் மடியில் அமர்ந்து துர்வாசரை மதியாமல் இருக்க. கோபத்தில் துர்வாசகர் பூமாதேவியை நீ இலக்குமியின் உருவத்தை பெறுவாய் என சாபமிட்டர். எனவே சாப விமோசனம் பெற பூமாதேவி இத்தலம் வந்து ஓம் நமோ நாராயணாய என்ற மந்திரத்தை ஜெபம் செய்து வர பங்குனி பவுர்ணமி தினத்தில் ஜெபம் செய்து ஆற்றில் நீரை அள்ளி எடுக்கும் பொழுது இரண்டு மகர குண்டலங்கள் (மீன் வடிவான காதில் அணியும் ஓர்அணிகலன்) கிடைக்க அப்பொழுது திருமால் பிரத்யட்சமாக் குண்டலங்களை திருமாலுக்க அளித்து மகிழ்ந்தார். தேவர்கள் பூ மாரி சொரிய பூமா தேவியின் மேனி அழகானது. லக்குமியின் உடலுடன் பூமா தேவி தவமிருந்ததால் ஸ்ரீபேரை (லக்குமியின் உடலைப் பெற்றவர்) என்று ஆனது.இன்று பெருமாள் மகர குண்டலங்களுடன் காட்சியளிக்கிறார். இதனால் பெருாளின் திருநாமம் மகர நெடுங்குழைகாதன் (மீன் வடிவிலான நீண்ட காதணிகளை அணிந்தவன்) வருணன், அசுரர்களிடம் போரிட்டு தன் பாசம் என்னும் ஆயுதத்தை இழந்து இத்தலம் வந்து தவம் செய்து திரும்பப் பெற்றதால் இத்தலத்தில் மழை வேண்டி (வருண பகவானை) பிரார்த்திக்கும் பிராத்தனைகள் இன்று வரை பொய்ப்பதில்லை. சுக்கிரனும் இங்கு வந்து பெருமாள் அருள் பெற்றார். விதர்ப்ப நாட்டு மன்னன் இங்கு வந்து வழிபட்டதால் நாட்டின் 12 வருட பஞ்சம் நீங்கி நாடு செழித்ததாக வரலாறு கூறுகிறது. பிரம்மனும் ஈசானய ருத்தரருக்கும் முன்பாக குழைக்காத நந்சியார், திருப்பேரை நாச்சியார் சகிதம் வீற்றிருந்த பரமபத

திருக்கோலத்தில் பெருமாள் சேவை சாதிக்கின்றார். வேதம் ஓதி வரும் வேத வித்களை காணவும், ஓடி விளையாடும் குழந்தைகளின் மகிழ்ச்சியை காணவும்இங்கு பெருமாள் கருடனை ஒதுங்கி இருக்க கூறியதால் கருடன் சன்னதி பெருமாளுக்கு இடப்பக்கமாக விலகி. அமைந்துள்ளது. "வேத ஒலியும் விழா ஒலியும் பிள்ளைக்குழா விளையாட்டு ஒலியும் அறாத் திருப்பேரை யில் சேர்வன் நானே" என்ற நம்மாழ்வார் பாசுரமும் இதையே காட்டுவதாக கூறப்படுகின்றது. நம்மாழ்வார் காலத்திற்கும் முன்பே அமையப் பெற்றது. இக்கோவில் பின் பத்தாம் நூற்றாண்டின் மத்தியில் கொடி மரமும்,மண்டபமும், பின் வெளி மண்டபம், தேரும் செய்யப்பட்டுள்ளதாக கல்வெட்டுகள் கூறுகின்றன. சுந்தரபாண்டியனுக்கு குழந்தை பேறு பெற வேண்டி அவனால் சோழ நாட்டில் இருந்து இவ்வூருக்க அழைத்து வரப்பட்டு தினசரி பெருமாளை பூஜை செய்வதற்காக குடியமர்த்தி பொன்னும் பொருளும் கொடுக்கப்பட்ட ஜெய்முனி சாமவேத தலவகார நூற்றெண்மர் வழி வந்த இவ்வூர் அந்தணர்கள் பெருமாளை தங்களுள் ஒருவராகவே கருதி பல. அறக்கட்டளைகளை ஏற்படுத்தி பல்வேறு நித்தியமாக வருட கைங்கரியங்களை செய்து வருகின்றனர். சந்தர பாண்டியனுக்காக 108 அந்தணர்களை சோழ நாட்டில் இருந்து அழைத்து வரும் வழியில் ஒருவர்காணாமல் போய்விட்டார் ஊர் வந்தடைகையில் நூற்றியெழுபேர்தான் இருந்தனர். ஆனால் அரசன் இவ்வூர் வந்து பார்க்கையில் 108 நபர் இருந்தனர். பெருமாளே காணாமல் போன நபர் வடிவில் அரசன் முன் தோன்றினார் எனவும் அதனால் பெருமாள் எங்களில் ஒருவர் எனவும் இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். இங்கு பங்குனி ப்ரமோஸ்தலத்தின் 5ம் திரு நாள் இரவு பெருமாள் கருட சேவையில் பிரதான வாயிலில் இருந்து வெளி மண்டபத்திற்கு ஏழுகின்ற சமயத்தில் பெருமாளை சேவிக்கும் நாத்திகனும் ஆத்திகனும் ஆவான். வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாத அப்பேற்பட்ட காட்சி அது. ஸ்ரீ ரங்கநாதனின் அழகை முகில் வண்ணன் (அழகுடையவன்)' என்று பாடிய நம்மாழ்வார் பின்வரும் பாடலில் நிகரில் முகில் வண்ணன் (ஈடு இணையற்ற அழகுடையவன்) என்று ஸ்ரீமகர நெடுங் குழைக்காதனை பாடியுள்ளார். "கூடுபுனல் துறையும் (தாமிரபரணி கரை) குழைக்காதன் திருமாலையும் கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்பது இவ்வூரில் வழக்கில் உள்ள ஒரு கூற்று.

மூலவர் – மகர நெடுங்குழைக்காதன் வீற்றிருந்த திருக்கோலம் கிழக்கு பார்த்த திருமுக மண்டலம். உற்சவர் – நிகரில் முகில் வண்ணன். தாயார் – குழைக்காத நாச்சியார், திருப்பேரை நாச்சியார் தாயர்களுக்கு தனித்தனி சன்னதி. தீர்த்தம் – சுக்கிர புஷ்கரணி, சங்கு தீர்த்தம், கூடுபுனல் தீர்த்தம் பத்ர விமானம் – சுக்கிரன், ஈசானயருத்தரர், பிரம்மா முதலியவர்களுக்கு, பாஞ்சராத்ரம் – சம்பிரதாயம் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

வெள்ளைச் சுரிசங்கொடு ஆழியேந்தித்த தாமரைக் கண்ணன்
என்னெஞ்ஞூடே
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர் என் சொல்லிச் சொல்கேன்
அன்னைமீர்காள்

வெள்ளச் சுகமன் வீற்றிருக்கை வேதவொலியும் விழா வொலியும்,
பிள்ளைக் குழாவிளை யாட்டொலியும் அறாத் திருப்பேரையில்
சேர்வன் நானே

7. திருக்கோளூர் (செவ்வாய்)

தென்திருப்பேரையிலிருந்து ஆழ்வார்திருநகரி வரும் வழியில் 3 கி.மீ வந்து தெற்கே போகும் ஒரு கிளைப் பாதையில் 2 கி.மீ சென்றால் இத்திருத்தலத்தை அடையலாம். மதுரகவி ஆழ்வார் அவதார தலம்.

தல வரலாறு : குபேரன் ஒருமுறை சிவனைவழிபட கைலாயம் சென்றான். அங்கே உமயவள் சிவனுடன் இருக்க இவன்து கண்கள் உமயவளை கெட்ட நோக்கத்தோடு பார்க்க, இதனால் கோபம் கொண்ட பார்வதி குபேரனை சபித்தாள். அதனால் அவனிடம் இருந்த நவ நிதிகளும் அகன்று உருவம் விகாரமானது. நவநிதிகளும் தவமிருந்து இவ்வூர் பெருமாளை அடைக்கலம் கொண்டதால் வைத்தமாநிதி பெருமாள் (நிதிகளை வைத்திருப்பவர்) என அழைக்கப்படுகின்றார். குபேரன் தன் தவறை உணர்ந்து சிவன் பாதம் பணிய அவர் பார்வதியிடம் மன்னிப்பு கோருமாறு கூற, இவன் பர்வதியை அடிபணிய அவள் இனி உனக்கு ஒரு கண் தெரியாது, உடல் விகாரம் மாறாது, இழந்த நிதிகளை அவை தஞ்சம் அடைந்துள்ள வைத்தமாநிதி பெருமாளிடம் தவம் செய்து பெற்றுக் கொள் என்று கூறினாள். அவனும் இவ்வூர் பெருமாளை நோக்கி கடுந்தவம் செய்து பாதி நிதியை பெற்றான். திரும்ப பெற்ற செல்வங்களை ஓரிடத்தில் நிலையாக நில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கும் தன்மையுடன் இலக்குமி தேவிக்கு கொடுத்தான்.

நிலையான செல்வம் இருக்கும் இடத்தில் அதர்மம் ஆட்சிபுரியும் தர்மம் இருக்காது. ஆகவே செல்வம் ஒருவரிடம் நிலையாக இல்லாமல் சுழன்று கொண்டே இருக்க வேண்டும் என்பது பெருமாள கிருபை. தர்மம் நிரந்தரமாகவே இங்கே தங்கி பெருமாளை வழிபட்டு வருகின்றதாம். வியாச வம்சத்தில் வந்த தர்மகுப்தன் என்பவர் 10 குழந்தைகளுடன் தரிததி ரனாகி, வறுமையில் மிகவும் கஷ்டப்பட பரத்வாஜ முனிவரின் ஆலோசனையின்படி இங்கு வந்து பணிவிடை செய்து பெருஞ் செல்வத்திற்கு அதிபதியாக சுகவாழ்வு பெற்றான். இப்பெருமாள் மரக்கால் (அளக்கப் பயன்படுத்தும் அளவு) சயனத்தில் உள்ளார். இடது கையை உயர்த்திஇன்னு வேறுளங்கு செல்வம் உள்ளது என மையிட்டு பார்க்கிறார். இங்கு வசித்த விஷ்ணுநேசர் என்பவருக்கு மகனாக அவதரித்தவர்தான் மதுரகவியாழ்வார். இழந்த செல்வங்களை இப்பெருமானை வேண்டி வழிபட்டால் திரும்ப கிடைக்கும் என்று பிரமாண்ட புராணம் கூறுகிறது.

மூலவர் – வைத்தமாநிதிப்பெருமாள் நிஷேபவித்தன், புஜங்க சயனம் கிழக்கு பார்த்த திருமுகமண்டலம். தாயார் – குமுதவல்லி கோளூர் வல்லி தனித்தனி சன்னதி. தீர்த்தம் –குபேர தீர்த்தம், தாமிரபரணி நிதிவிமான் – ஸ்ரீகர விமானம். பிரத்யட்சம் – குபேரன், மதுரகவி. ஆகமம் – வைகானஸம். சம்பிரதாயம் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

உண்ணும்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன் சீர்வளம் மகிக் அவனூர் வினவி
தண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே

பாடல் 3293

8. ஆழ்வார்திருநகரி (வியாழன்)

ஆழ்வார்திருநகரி திருநெல்வேலி – திருச்செந்தூர் சாலையில் உள்ளது இத்திருத்தலம். புகைவண்டி நிலையம், பேரூந்து வசதிஇருக்கிறது. பல மடங்களும் சத்திரங்களும் இருக்கின்றன. நம்மாழ்வார் அவதரித்த திருத்தலம். நம்மாழ்வாருக்கு தனி சன்னதி, புளிமரத்திற்கு (உறங்கா புளி – இது இக்கோவிலின் தலவிருட்சம். இப்புளியமரத்தின் இலைகள் இரவில் மூடிக் கொள்வதில்லை. நம்மாழ்வார் சன்னதிக்கு மேல்மாடத்தில் உள்ளது.)

தல வரலாறு : ஒரு சமயம் திருமாலிடம் பிரம்மா தான் தவமிருக்க இடம் கூறுமாறுவேண்ட திருமால் உன்னை படைப்பதற்கு முன்னமே தாமிரபரணி நதிக்கரையில் யாம் எழுந்தருளி உள்ளோம் என்று கூறினார். ஆதியிலே தோன்றி நாதன் என்பதால் ஆதி நாதன், ஆதிபிரான் என திருநாமம் கொண்டார். திருமாலே பிரம்மனுக்கு குருவாக காட்டிய இடமாகியதால் குருகூர் என வழங்கப்படுகின்றது. இங்கு ஆற்றில் வந்த சங்கு இப்பெருமானை வழிபட்டு மோட்சம் பெற்றால் சங்கின் வேறு பெயர் குருகு. குருகு மோட்சம் பெற்ற தலம் குருகுஊர் குருகூர் என்றும் கொள்ளலாம். சங்குமோட்சம் பெற்றதலம் இன்றும் திருச்சங்கண்ணி துறை என்று கூறுகின்றனர்.

சாளக்கிராமத்தில் மந்தன் என்ற அந்தணச் சிறுவன் வேதம் படிக்கும் காலத்தில் அதை சரியாக படிக்காமலும் வேதத்தை இகழ்ந்து பேசியும் வந்தான். இதனால் கோபமுற்ற குரு அவனை ஈழிகுலத்தில் பிறக்க சபித்தார். அவனும் படிப்பதை நிறுத்திவிட்டு திருமால் ஸ்தலங்களின் ஆலய துப்புரவு பணிகளில் ஈடுபட்டு தன் காலங்கடந்தான் மறு பிறவியில் தாந்தன் என்னும் பெயரில் கீழ்குலத்தில் பிறந்து ஒழுக்கத்தில் சிறந்தவனாக விளங்கினான். பின்னார் குருகூர் திருச்சங்கண்ணி துறைக்கு வந்து ஆதிநாதனை வழிபட்டு வந்தான். அங்கே இருந்தவர்கள் இவனை வெறுத்து ஒதுக்க அவன் கிழக்கே சென்று மறுகரையில் ஆதிபிரானை மணலில் அமைத்து வழிபட்டான். திடீரென தாந்தனை ஒதுக்கியவர்களுக்கு கண் தெரியாமல் போகவே அவர்கள் பெருமாளை சரணடைய அசரீரியாய் நீங்கள் தாந்தனை ஒதுக்கியதற்கு தண்டனை என்று கூற அவர்கள் அவன் இருப்பிடம் சென்று மன்னித் தருள வேண்டிய பின் கண்ணொளி பெற்றனர். பெருமாளும் தாயார்களோடு காட்சி கொடுத்து தாந்தனை தன்னுடன் இணைத்துக் கொண்டார். இதனால் தாந்த ஷேத்ரம் என கூறுகின்றனர்.

பிற்காலத்தில் தாந்தன் தங்கிய ஆலமரத்தில் முன்பு ஒருமுறை தங்கிய வேடன் ஒருவன் மறு பிறவியில் சங்கன் என்னும் முனிவராக கடுந்தவம் கொள்கையில் நாரத முனி அவனிடத்தில் தவத்திற்கான காரணம் கேட்க

அவன் மோட்சம் வேண்டும் என்று கூற அவரும் குருகூர் சென்று பெருமாளை வேண்டுமானு அறிவுறுத்த முனிவரும் சங்காக மாறி குருகுகூர் வேண்டி பெருமாள் காட்சி அளித்து மோட்சம் பெற்றார். அந்த இடம்தான் இன்றும் திருச்சங்கண்ணி துறை என்று அழைக்கப்படுகிறது. இங்கு இருக்கும் புளியமரம் இலக்குமணன் எனப்படுகிறது. ஆதிசேஷனாக இலக்குமணம் இருப்பதால் சேஷ சேஷத்திரம் எனவும். வராஹ அவதாரம் காண முனிவர்கள் இத்தலத்தில் தவமிருந்து அவர்களுக்கு பிராட்டியுடன் வராஹ நாராயணன் காட்சியளித்ததால் வராஹஷேத்திரம் எனவும் நாய்க்கும் மோட்சம் அளித்த தீர்த்தகரை என்பதால் தீர்த்த ஷேத்திரம் எனவும் பஞ்ச மஹா ஷேத்திரம் என்றும் கூறுவர். நம்மாழ்வார் குழந்தையாக தவழ்ந்த புளியமரத்தில் இன்றும் குழந்தையின் உருவம் உள்ளது.

நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தை எழுத நினைத்த நாதமுனிகள், மதுரகவி வம்சத்தினிடம் கண்ணி நுண் சிறுத்தாம்பு பெற்று அதை பலாயிரம் முறை ஜெபிக்க நம்மாழ்வாரே நேரில் வந்து அருள நாதமுனி அவற்றை எழுதினார் என்று கூறப்படுகிறது.

இங்குள்ள ஆதிபிரான் சுயம்பு உருவம் கால்கள் பூமியுள் இருப்பதாக ஐதிகம். நம்மாழ்வார் மூலவ வடிவம் தாமிரபரணி நீரை காய்ச்சி அதில் மதுர கவி தன் சக்திகளை பிரையோகித்து உருவாக்கிய சிற்பம் கைப்படாத சிற்பம் என்று கூறப்படுகிறது.

மூலவர் – ஆதிநாதன் பொலிந்து நின்ற பிரான், நின்ற திருக்கோலம், கிழக்கு பார்த்த திருமுகமண்டலம், தாயார் – ஆதிநாதவல்லி, குருகூர் வல்லி. (தாயர்களுக்கு தனித்தனி சன்னதி) தீர்த்தம் – பிரம்ம தீர்த்தம், திருசங்கண்ணி துறை. விமானம் – கோவிந்த விமானம். பிரத்யட்சம் – பிரம்மா, மதுரகவி, நம்மாழ்வாருக்கு. ஆகமம்– பாஞ்சராத்ரம் – சம்பிரதாயம் – தென்கலை.

நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

ஒன்றுந்தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா
அன்று, நான் முகன் தன்னோடு தேவர் உலகோடு உயிர் படைத்தான்
குன்றும் போல் மணி மாடம் நீடு திருக்குருகூர் அதனுள்
நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றெத் தெய்வம் நாடுதிரே.

பாடல் 3106

சோழநாட்டுத் திருப்பதிகள் – 40

1] ஸ்ரீ ரங்கம்

ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்களிலே முதன்மையானதாக "கோயில்" . இக்கோயில் திருச்சி – விழுப்புரம் கார்டுலைனில் உள்ள ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து டவுண் ப்ஸ்ஸில் சென்றால் கோயில் தெற்குக்கோபுர வாசலிலேயே இறங்கலாம்.

மூலவர் : ஸ்ரீ ரங்கநாத பெருமாள் (ஆதிசேஷ சயனத்திருக்கோலம்)

2] திருக்கோழி [உறையூர்]

இது திருச்சி முனிஸிபாலிடியிலேயே ஒரு பகுதி. டவுண் ஜங்ஷன்– மெயின் கார்டுகேட் மார்க்கத்தில் உறையூர் என்ற இடத்தில் இறங்கலாம்.

திருச்சி ஜங்ஷனிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மூலவர் : அழகிய மணவாளப் பெருமாள், நின்ற திருக்கோலம்.

3] திருக்கரம்பனூர் [உத்தமர் கோயில்]

இது திருச்சி அருகில் கார்டுலைனில் உள்ள ஒரு சிறிய ஸ்டேஷன் ஸ்ரீரங்கத்திலிருந்து வடக்கே 3/4 கி.மீ. திருச்சியிலிருந்தும் ஸ்ரீ ரங்கத்திலிருந்தும் திருவெள்ளறை போகும் பஸ் வழியில் இங்கு இறங்கலாம்.

மூலவர் : புருஷோத்தமன், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

4] திருவெள்ளறை [வேதகிரி, ச்வேதகிரி]

திருச்சியிலிருந்து துறையூர் போகும் பஸ் பாதையில் சுமார் 20 கி.மீ தூரத்தில் உள்ளது.

மூலவர் : புண்டரீகாக்ஷன், செந்தாமரைக் கண்ணன் நின்ற திருக்கோலம்

5] திருஅன்பில் [அன்பில்]

திருச்சி– கல்லணை, கும்பகோணம் பஸ் மார்க்கத்தில் உள்ளது. திருச்சிக்கு அருகே உள்ள லால்குடியிலிருந்து 8 கி.மீ தூரத்தில் உள்ளது.

மூலவர் : வடிவழகிய நம்பி, புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

6] திருப்பேர் நகர் [கோயிலடி, அப்பக்குடத்தான்]

அன்பிலில் இருநு்து கொள்ளிடத்திற்கு அக்கரையில் 5 கி.மீ தூரத்தில் உள்ளது. தோஹுர் – திருக்காட்டுப்பள்ளி – தஞ்சை பஸ்ஸிலும் சென்று வரலாம்.

மூலவர் : அப்பக்குட்த்தான், அப்பாலா ரெங்கநாதன்

7] ஸ்ரீ ரங்கம்

தஞ்சையிலிருந்து வடக்கே திருவையாறு செல்லும் பஸ்ஸில் 9–10 கி.மீ தூரத்தில் உள்ளது. டவுன் பஸ் வசதி உள்ளது.

மூலவர் : ஹரசாபவிமோசனப் பெருமாள், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

8] திருக்கூடலூர் [ஆடுதுறைப் பெருமாள் கோயில்]

தஞ்சாவூரிலிருந்து பஸ் மார்க்கமாய் திருவையா்று சென்று அங்கிருந்து கும்பகோணம் செல்லும் பஸ்ஸில் 11 கி.மீ தூரம் சென்று இவ்வூரை அடையலாம்.

மூலவர் : வையங்காத்த பெருமாள், உய்யவந்தார், நின்ற திருக்கோலம்.

9] திருக்கவித்தலம் [கபிஸ்தலம்]

பாபநாசம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வண்டியில் வரலாம். கும்பகோணத்திலிருந்து திருவையாறு பஸ்ஸில் வரலாம்.

மூலவர் : கஜேந்த்ர வரதன், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்


10] திருப்புள்ளம்பூதங்குடி [புள்ளபூதங்குடி]

கும்பகோணத்திலிருந்து சுவாமி மலை வழியாக திருவைகாவூர் செல்லும் டவுண் பஸ் பாதையில் சுவாமிமலைக்கப்பால் 4–5 கி..மீ தூரத்தில் உள்ளது.

NAVA THIRUPATHI TEMPLES

No.	Sthala Name	Moolavar	Urchavar	Thayar	Distrace From Srivai	Temple Opening Time	
						Morning	Evening
1	Srivaikundam (Sun-Suriyan)	Vaikundanathan	Kazhapiran	Vaikundanaayahi Sooranathanayahi	0.00	7.30 - 12.00	5.00 - 8.00
2.	Srivaragunamangal (Nathan) Chandran	Vijayasanar (Paramapatha	Emmiderkadivan	Varagunamangal Varagunavalli	2 KM	9.00 - 12.00	1.00 - 6.00
3.	Thiruppuliyankudi Puthan	Boomipaalagar	Kaaichinaventhan	Nilamagal, Malarmahal Pulingudivalli	3 KM	9.00 - 12.00	1.00 - 6.00
4.	Eratti Thirupathi Raagu	Srinivasan	Thevarpiran	Alamelumangai	10 KM	8.00 - 12.00	1.00 - 5.00
5.	Eratti Thirupathi Kethu	Aravinason	Chenthamarai Kannan	Karunthdankanni	10 KM	8.00 - 12.00	1.00 - 5.00
6.	Thirukuzhanthai (Perungulam) Sani	Venkadavannan	Maayakoothar	Kamalavathi Thayar Kulanthivalli Thayar	12 KM	7.30 - 12.00	5.00 - 7.30
7.	Thenthiruperai Sukran	Maharenedun Kuzhaikaathar	Niharilmukil vannan	Kuzhaikaathu Valli (Thiruperai Nachiyar)	10 KM	7.30 - 12.00	5.00 - 7.30
8.	Thirukkolloor Sevvai	Vaithamanidhi	Nichopavithan	Kumutha Valli Kolloor Valli	8 KM	7.30 - 12.00	5.00 - 8.00
9.	Alwarthirunagari Viyazhan	Aadinathan	Polinthunin-trapiran	Aadinatha Nayagi	5 KM	7.30 - 12.00	5.00 - 8.00

நவதிருப்பதி ஆலயங்கள் செல்லும் மார்க்கம்



ஸ்ரீ கிருஷ்ணா பப்ளிகேஷன்ஸ். ஸ்ரீவைகுண்டம்.

நவதிருப்பதி ஸ்தலங்கள்

எண்	ஸ்தலப் பெயர்	மூலவர்	உற்சவர்	தாயார்	ஸ்ரீவை இருந்து தூரம் கி.மீ	நடைதிறந்திருக்கும் நேரம்	
						காலை	மாலை
1	ஸ்ரீவைகுண்டம் சூரியன்	வைகுண்டநாதன்	கள்ளர்பிரான்	வைகுண்டநாயகி சோராநாதநாயகி	0.00	7.30 - 12.00	5.00 - 8.00
2.	ஸ்ரீவரகுணமங்கை (நத்தம்) சந்திரன்	விஜயாஸனர் (பரமபதநாதன்	எம்மிடர் கடிவான்	வரகுணமங்கை வரகுணவல்லி	2.00	காலை 9மணி முதல் மாலை 6மணி வரை நடை திறந்திருக்கும்.	
3.	திருப்புளியங்குடி புதன்	பூமிபாலகர்	காய்சினவேந்தன்	நிலமகள் மலர்மகள் புலிங்குடிவல்லி	3.00	காலை 9மணி முதல் மாலை 6மணி வரை நடை திறந்திருக்கும்.	
4.	இரட்டை திருப்பதி ராகு	ஸ்ரீனிவாசன்	தேவர்பிரான்	அலமேலுமங்கை பத்மாவதி	10.00	காலை 9மணி முதல் மாலை 6மணி வரை நடை திறந்திருக்கும்.	
5.	இரட்டை திருப்பதி கேது	அரவிந்த லோசனர்	செந்தாமரை கண்ணன்	கருந்தடங்கண்ணி	10.00	காலை 9மணி முதல் மாலை 6மணி வரை நடை திறந்திருக்கும்.	
6.	திருக்குளத்தை (பெருங்குளம்) சனி	வேங்கடவாணன்	மாயகூத்தர்	கமலாவதித்தாயார் குழந்தைவல்லித் தாயார்	12.00	7.30 - 12.00	5.00 - 7.30
7.	தென்திருப்பேரை சுக்கிரன்	மகரநெடுங் குழைக்காதர்	நிகரில் முகில் வண்ணன்	குழைக்காது வல்லி திருப்போரை நாச்சியார்	10.00	7.30 - 12.00	5.00 - 7.30
8.	திருக்கோளூர் செவ்வாய்	வைத்தமாநிதி	நிக்சோபவித்தன்	குமுதவல்லி கோளூர்வல்லி	8.00	7.30 - 12.00	5.00 - 8.00
9.	ஆழ்வார்திருநகரி வியாழன்	ஆதிநாதன்	பொலிந்து நின்ற பிரான்	ஆதிநாதநாயகி திருகுருகூர்நாயகி	5.00	7.30 - 12.00	5.00 - 8.00

மூலவர் : வல்வில் ராமன், கிழக்கே திருமுக மண்டலம்

11] திரு ஆதனூர்

சுவாமிமலையிலிருந்து சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கு வசதிகள் எதுவும் இல்லை.

மூலவர் : ஆண்டளக்குமையன், கிழக்கே திருமுக மண்டலம்

12] திருக்குடந்தை [சாரங்கபாணி சுவாமி கோயில்]

கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இக்கோயில் சுமார் 2-3 கி.மீ தூரம். இந்த ஊரில் ஹோட்டல், சத்திரம் முதலிய வசதிகளும் உண்டு.

மூலவர் : சாரங்கபாணி, கிழக்கே திருமக மண்டலம்

13] திருவிண்ணகர் [ஒப்பிலியப்பன் கோயில்]

தங்கவசதி உண்டு. கும்பகோணத்திலிருந்து 6-7 கி.மீ. தூரத்திலேயே இருப்பதால் அங்கேயே தங்கி காரிலோ, பஸ்ஸிலோ இந்த க்ஷேத்திரத்தை ஸேவிக்கலாம்.

மூலவர் : ஒப்பிலியப்பன், கிழக்கே திருமுக மண்டலம்.

14] திருநறையூர் [நாச்சியார் கோயில்]

கும்பகோணத்திலிருந்து 9-10 கி.மீ. தூரத்திலுள்ளது. பல வெளியூர் பஸ்களிலும் (முக்கியமாக, குடவாசல், திருவாரூர் வழி) போகலாம். எல்லா வசதிகளும் உண்டு.

மூலவர் : ஸ்ரீநிவாஸன், திருநறையூர் நம்பி, வாஸுதேவன் என்ற பெயர்களுடன் நின்ற கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம்.

15] திருச்சேறை [பஞ்சஸாரக்ஷேத்ரம்]

நாச்சியார் கோயிலில் இருந்து சுமாராக 10 கி.மீ. கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கில் 24 கி.மீ தூரத்தில் திருவாரூர் நெடுஞ்சோலையில் உள்ளது. டவுண் பஸ் மூலம் செல்லலாம். சத்திரம், ஹோட்டல்களும் உண்டு.

மூலவர் : ஸாரநாதன், நின்ற திருக்கோலம்

16] திருக்கண்ணமங்கை

திருச்சேறையிலிருந்து சுமார் 25 கி.மீ. கும்பகோணத்திலிருந்து சுமார் 40 கி.மீ.திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து வட மேற்கில் 6-7 கி.மீ. கும்பகோணம் – திருவாரூர் பஸ் மூலம் வரலாம்.

மூலவர் : பக்தவத்ஸலப் பெருமாள், நின்ற திருக்கோலம்.

17] திருக்கண்ணபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து நன்னிலம் போகும் பஸ்ஸில் திருப்புகலூர் (திருப்புகூர்) என்ற இடத்தில் இறங்கி 2 கி.மீ. போக வேண்டும். இங்கு வசதிகள் ஒன்றும் இல்லை.

மூலவர் : நீலமேகப் பெருமாள், கிழக்கே திருமுக மண்டலம்.

18] திருக்கண்ணங்குடி [க்ருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்]

திருவாரூருக்கு 14 கி.மீ கிழக்கு., பஸ் வழியாக சிக்கிலுக்கும் கீவளூருக்கும் இடையேயுள்ள ஆழியூர் என்ற இடத்தில் இறங்கி அங்கிருந்து

1 கி.மீ. தூரம் நடந்தோ வண்டியிலோ செல்லலாம். இங்கு வசதிகள் ஒன்றும் இல்லை.

மூலவர் : லோகநாதன், நின்ற திருக்கோலம்.

19] திருநாகை [நாகபட்டினம்]

மாயவரத்திலிருந்து பஸ்ஸில் வந்து இறங்கினால் பஸ் நிலையத்திற்கு எதிர்த்தெருவிலேயே சற்று தூரத்தில் அழகிய, பெரிய கோயில் உள்ளது.

மூலவர் : நீலமேகப்பெருமாள்

20] திருத்தஞ்சை மாமணிக் கோயில் [தஞ்சாவூர்]

தஞ்சாவூர் ஜங்ஷனிலிருந்து 4 கி.மீ தூரத்தில் வெண்ணாற்றங்கரையில் உள்ளன.

1] தஞ்சை மாமணிக்கோவில்

மூலவர் : நீலமேகப்பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம்

2] மணிக்குன்றம்

மூலவர் : மணிக்குன்றப்பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம்

3] தஞ்சையாளி நகர்

மூலவர் : நரஸிம்மன், வீற்றிருந்த திருக்கோலம்

21] திருநந்திபுர விண்ணகரம் [நாதன் கோயில், தக்ஷிண ஜகந்நாதம், ஸ்ரீனிவாஸஸ்தலம்]

கும்பகோணத்திலிருந்து பஸ்ஸில் கொருக்கை என்ற ஊருக்கு வந்து அங்கிருந்து 2.5 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். வழியில் ஒரு வாய்க்காலை கடக்க வேண்டும்.

மூலவர் : ஜகந்நாதன், வீற்றிருந்த திருக்கோலம்

22] திருவெள்ளியங்குடி [வெள்ளியங்குடி]

கும்பகோணம் (அ) திருப்பணந்தாளிலிருந்து அணைக்கரை செல்லும் பஸ்ஸில் சேங்கானூரில் இறங்கி 1 கி.மீ. நடந்து திருவெள்ளியங்குடி செல்ல வேண்டும்.

மூலவர் : கோலவில்லி ராமன், கிழக்கே திருமுக மண்டலம்.

23 திருவழுந்தூர் [தேரழுந்தூர்]

மாயவரத்திலிருந்து தென்மேற்கே 21 கி.மீ டவுன் பஸ்ஸில் போகலாம்.

மூலவர் : தேவாதிராஜன், நின்ற திருக்கோலம்

24] திருச்சிறுபுலியூர் [சிறுபுலியூர்]

மாயவரம் – திருவாரூர் ரயில் பாதையில், கொல்லுமாங்குடி ஸ்டேஷனிலிருந்து 3 கி.மீ. மாயவரத்திலிருந்து டவுன் பஸ்ஸில் கொல்லுமாங்குடி போகலாம். இங்கு வசதிகள் ஒன்றுமில்லை.

மூலவர் : அருள்மாகடல், புஜங்கசயனம், தெற்கே திருமுக மண்டலம்

25] திருத்தலைச் சங்க நாண்மதியம் [தலைச்சங்காடு]

மாயவரத்திலிருந்து ஆக்கூர் போய் அங்கிருந்து சீர்காழி செல்லும் பஸ் சாலையில் 3 கி.மீ சென்று இவ்வூரை அடையலாம்.

மூலவர் : நாண்மதியப்பெருமாள், நின்ற திருக்கோலம்

26] திருஇந்தளூர் [மயிலாடு துறை, திருவிழந்தூர்]

இது மாயவரம் முனிஸிபாலிட்டியிலேயே ஒரு பகுதி. டவுண் பஸ்ஸல் போகலாம். காவேரிக்குஅக்கரை.

மூலவர் : பரிமள ரங்கநாதன், வீரசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

27] திருக்காவளம்பாடி [திருவாங்கூர்]

சென்னை–மாயூரம் ரயில் பாதையில் வைத்தீசுவரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இங்கு வசதிகள்இல்லை.

மூலவர் : கோபாலகிருஷ்ணன் நின்ற திருக்கோலம்

28] திருக்காழிச்சீராம விண்ணகரம் [சீர்காழி]

சீர்காழி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது. பஸ்ஸில் சென்றால் கோயில் ஸந்நிதி வாசலிலேயே இறங்கலாம்.

மூலவர் : த்ரிவிக்ரமன், நின்ற திருக்கோலம்.

29] திருஅரிமேய விண்ணகரம் [திருநாங்கூர்]

சீர்காழி ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கே 8 கி.மீ. தொலைவில் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது. குடமாடுகூத்தர் கோயில் என்றுதான் பலருக்குத் தெரியும்.

மூலவர் : குடமாடுகூத்தன், வீற்றிருந்த திருக்கோலம்.

30] திருவண்புருடோத்தமம் [திருநாங்கூர்]

இந்த ஸ்தலமும் சீர்காழியிலிருந்து 8 கி.மீ தூரத்தல் திருநாங்கூரிலேயே உள்ளது.

மூலவர் : புருஷோத்தமன், நின்ற திருக்கோலம்.

31] திருசெம்பொன்செய் கோயில் [திருநாங்கூர்]

இதுவும் சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் திருநாங்கூரிலேயே உள்ளது. பஸ் வசதி உண்டு.

மூலவர் : பேரருளாளன், நின்ற திருக்கோலம்

32] திருமணிமாடக்கோயில் [திருநாங்கூர்]

சீர்காழியிலிருந்து சுமார் 8 கி.மீ தூரத்தில் திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது. தங்குவதற்கு ராமாநுஜகூடம் உண்டு.

மூலவர் : நாராயணன், வீற்றிருந்த திருக்கோலம்

33] திருவைகுந்த விண்ணகரம் [திருநாங்கூர்]

சீர்காழியிலிருந்து 8 கி.மீ தூரத்தில் உள்ளது. பஸ் வசதிகள் உண்டு இதுவும் திருநாங்கூரிலேயே உள்ளது.

மூலவர் : வைகுந்த நாதன், உபய நாச்சிமார்களும் வீற்றிருக்கின்றனர்.

34] திருவாலியும் திருநகரியும்

திருவாலி : சீர்காழி – திருவெண்காடு பஸ் சாலையில் உள்ளது சீர்காழி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 8 கி.மீ திருநாங்கூரிலிருந்து இவ்வழி 5–6 கி.மீ.தான். இங்கு வசதிகள் எதுவும் இல்லை.

மூலவர் : லக்ஷ்மி நருஸிம்ஹர், வீற்றிருந்த திருக்கோலம்

திருநகரி : திருவாலியில் இருந்து சுமார் 5 கி.மீ தூரம் உள்ளது.

மூலவர் : வேதராஜன், வீற்றிருந்த திருக்கோலம்.

35] திருத்தேவனார் தொகை [கீழச்சாலை]

சீர்காழி ஸ்டேஷனிலிருந்து தென் கிழக்கே 6 கி.மீ. சீர்காழி–திருவெண்காடு பஸ் மார்க்கத்தில் திருவாலியில் இறங்கி முக்கால் மைல் வண்டியில் வரலாம். இங்கு வசதி ஒன்றும் கிடையாது.

மூலவர் : தெய்வநாயகன், நின்ற திருக்கோலம்

36] திருவாலியும் திருநகரியும்

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள திருநாங்கூருக்குள்ளேயே உள்ளது. பள்ளிகொண்ட பெருமாள் என்றே ப்ரஸித்தம். கீழவீதியிலிருந்து மேற்கே செல்லும் சாலையில் உள்ளது.

மூலவர் : செங்கண்மால், புஜங்கசயனத் திருக்கோலம்

37] திருமணிக்கூடம் [திருநாங்கூர்]

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள திருநாங்கூர் எல்லையிலிருந்து கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மூலவர் : வரதராஜப்பெருமாள், நின்ற திருக்கோலம்.

38] திருவெள்ளக்குளம் [அண்ணன் கோயில்]

சீர்காழி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கில் 10 கி.மீ. சீர்காழி நாகை பேருந்துகள் அனைத்திலும் செல்லலாம்.

மூலவர் : ஸ்ரீநிவாஸன், நின்ற திருக்கோலம்

39] திருபார்த்தன்பள்ளி [திருநாங்கூர்]

சீருகாழியிலிருந்து 12–13 கி.மீ. தூரத்தில் உள்ளது. இடையில் சிறிய காவிரி ஆற்றைக் கடந்து வர வேண்டும். சிறிய ஊர். வசதிகள் ஒன்றும் இல்லை.

மூலவர் : தாமரையாள் கேள்வன், நின்ற திருக்கோலம்

40] திருச்சித்ரகூடம் [சிதம்பரம்]

சென்னை – திருச்சி மெயின் லைனில் சிதம்பரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் தில்லை நடராஜர் கோயிலுக்குள் உள்ளது.

மூலவர் : கோவிந்தராஜன், போகசயனம்

நடுநாட்டுத் திருப்பதிகள் 2

41] திருவஹீந்த்ரபுரம்

சென்னை–திருச்சி மெயின் லைனில் திருப்பாதிரிபுலியூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. கடலூரில் தங்கியும் ஸேவிக்கலாம். *மூலவர் :* தெய்வநாயகன், நின்ற திருக்கோலம்.

42] திருக்கோவலூர்

விழுப்புரம்-காட்பாடி ரயில் பாதையில் திருக்கோவலூர் ஸ்டேஷனிலிருந்து கோயில் 3 கி.மீ தூரத்தில் இருக்கிறது. திருவண்ணாமலையிலிருந்து 36 கி.மீ எல்லா வசதிகளும் உண்டு.

மூலவர் : த்ரிவிக்ரமன்

தொண்டை நாட்டுத் திருப்பதிகள் – 22

43] திருக்கச்சி – அத்திகிரி

[அத்தியூர், காஞ்சீபுரம், ஸத்யவ்ரதக்ஷேத்ரம்]

செங்கற்பட்டு - அரக்கோணம் ரயில் பாதையிலுள்ள இந்த ஸ்டேஷனை சென்னை கடற்கரை - காஞ்சீபுரம் ரயிலில் சென்றும் அடையலாம்.

மூலவர் : வரதராஜன், நின்ற திருக்கோலம்

44] அஷ்டபுயகரம் [காஞ்சீபுரம்]

காஞ்சியிலேயே வரதராஜர் ஸந்நிதியிலிருந்து 2 கி.மீ. மேற்கே ரங்கசாமி குளத்திற்கு தெற்கே உள்ளது.

மூலவர் : ஆதிகேசவப் பெருமாள், நின்ற திருக்கோலம்

45] திருத்தண்கா [தூப்புல், காஞ்சீபுரம்]

காஞ்சியிலேயே அஷ்டபுயகரத்திலிருந்து 1/2 கி.மீ தூரத்தில் மேற்கே உள்ளது.

மூலவர் : தீபப்ரகாசர், விளக்கொளிப் பெருமாள்

46] திருவேளுக்கை [காஞ்சீபுரம்]

காஞ்சீபுரத்திலேயே, அஷ்டபுயகரத்திலிருந்து 1 கி.மீ தென்மேற்கே விளக்கொளிப் பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ளது.

மூலவர் : அழ்கியசிங்கர், பத்மாஸந திருக்கோலம்

47] திரு நீரகம் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சீபுரத்தில் (ஊரகம்)உலகளந்த பெருமாள் கோயிலேயே உள்ளது.

உத்ஸவர் : ஜகதீச்வரர், நின்ற திருக்கோலம்.

48] திருப்பாடகம் [காஞ்சீபுரம்]

இதிலிருந்து ஒன்பது திவ்ய தேசங்கள் பெரிய காஞ்சீபுரத்தில் உள்ளன. கங்கைகொண்டான் மண்டபத்தின் அருகில் இந்த ஸந்நிதி இருக்கிறது.

மூலவர் : பாண்டவ தூதர், வீற்றிருந்த திருக்கோலம்

49] திரு நிலாத்திங்கள் துண்டம் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சீபுரம் ஏகாம்பரேச்வரர் கோயிலில் உட்ப்ராகாரத்தில் மிகச் சிறிய ஸந்நிதியாக உள்ளது.

மூலவர் : நிலாத்திங்கள் துண்டத்தான்

50] திரு ஊரகம் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சீபுரத்தில் பஸ் நிலையத்திற்கு ஸமீபமாகவே உள்ளது.

மூலவர் : திரிவிக்ரமன், உலகளந்த பெருமாள், நின்ற திருக்கோலம்

51] திருவெ∴கா [காஞ்சீபுரம்]

இது காஞ்சீபுரத்திலுள்ள, அஷ்டபுயகரத்திலிருந்து வடக்கே தூரத்திலுள்ளது. யதோக்தகாரி கோயில் என்று விசாரிக்கவும்.

மூலவர் : யதோக்தகாரி, சொன்னவண்ணம் செய்த பெருமாள்.

52] திருக்காரகம் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சியில் (ஊரகத்தில்) உலகளந்த பெருமாள் கோயில் ப்ராகாரத்திலேயே உள்ளது.

மூலவர் : கருணாகரப் பெருமாள், நின்ற திருக்கோலம்

53] திருக்கார்வானம் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சியில் (ஊரகத்தில்) உலகளந்த பெருமாள் கோயில் மேற்கு ப்ராகாரத்திலேயே ஒரு ஸந்நிதியாக உள்ளது.

மூலவர் : கார்வானர், நின்ற திருக்கோலம்

54] திருக்கள்வனூர் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சீபுரத்தில் காமாக்ஷி அம்மன் கோயிலுக்குள், அம்மன் கர்ப்பக்ரஹத்துக்கு வலது பக்கத்தில் இருக்கிறது.

மூலவர் : கள்வர், நின்ற திருக்கோலம்

55] திருப்பவளவண்ணம் [காஞ்சீபுரம்]

பெரிய காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயிலுக்குக் கிழக்கே அருகிலுள்ளது. ஸந்நிதிகள் இரண்டையுமே ஒரே திவ்யஸ்தலமாகச் சேர்த்தே ஸேவிப்பது இரண்டையுமே ஒரே திவ்யஸ்தலமாகச் சேர்த்தே ஸேவிப்பது வழக்கமாகவிருக்கிறது.

மூலவர் : பவளவண்ணன், நின்ற திருக்கோலம்

56] திருப்பரமேச்சுர விண்ணகம் [காஞ்சீபுரம் – வைகுண்ட பெருமாள் கோயில்]

பெரிய காஞ்சீபுரத்தில் ரயிலடியிலிருந்து சற்று தூரத்தில் உள்ளது. காமாட்சியம்மன் கோயிலுக்குக் கிழக்கே பஸ் ஸ்டாண்டிற்குப் பின்புறமுள்ள கிழக்கு ராஜவீதியில் வலதுபுறம் செல்லும் சாலையில் உள்ளது.

மூலவர் : பரமபத நாதன், வீற்றிருந்த திருக்கோலம்

57] திருப்புட்குழி

காஞ்சீபுரத்திலிருந்து 11 கி.மீ. மேற்கே சென்னை–வேலூர் சாலையில் பாலுசெட்டி சத்திரம் என்ற ஊரிலிருந்து இடது புறம் 1/2 கி.மீ. (ஹைவே) தூரத்தில் ''வெள்ளை கேட்'' என்று சொல்லப்படும் லெவல் க்ராஸிங் தாண்டி வலது பக்கத்தில் உள்ளது. சென்னையிலிருந்து 50 மைல். இவ்வூரில் வசதிகள் ஒன்றும் இல்லை.

மூலவர் : விஜயராகவப் பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம்

58) திருநின்றவூர் (திண்ணனூர்)

சென்னை-அரக்கோணம் ரயில் பாதையில் திருநின்றவூர் என்ற ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 2கி.மீ. தெற்கே சென்று கோயிலை அடைய வேண்டும். சென்னையிலிருந்து பஸ் வசதியும் இதர வசதிகளும் உண்டு.

மூலவர் : பக்தவத்ஸலப் பெருமாள். நின்ற திருக்கோலம்

59) திருஎவ்வுள்
(திருவள்ளூர்-புண்யாவர்த்த, வீக்ஷாரண்ய க்ஷேத்ரம்)

சென்னை-அரக்கோணம் ரயில் பாதையில் திருவள்ளூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 4-5கி.மீ. வண்டியில் அல்லது டவுண் பஸ்ஸில்போக வேண்டும்.

மூலவர் : வீரராகவப் பெருமாள், புஜங்கசயனம்

60) திருவல்லிக்கேணி
(ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம்)

சென்னை-எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து 5.கி.மீ திருமயிலை மெட்ரோ ரயில் பாதையில் தனி ஸ்டேஷன் உண்டு இந்த ஆயைத்தில் 5 ஸந்நிதிகள் உள்ளன.

மூலவர் : வேங்கடகிருஷ்ணன் நின்ற திருக்கோலம்.

61) திருநீர்மலை (தோயாத்ரி க்ஷேத்ரம்)

சென்னை- தாம்பரம் ரயில் பாதையில் பல்லாவரம் ஸ்டேஷனிலிருந்து சுமார் 6 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கு பெருமாள் நான்கு திருக்கோலங்களில் எழுந்தருளியிருக்கிறார்.

மூலவர் : நீர்வண்ணன்

62) திரு இடவெந்தை (திருவடந்தை)

சென்னை-கோவளம் வழியாக மகாபலிபுரம் செல்லும் இல் (மெயின்ரோடிலேயே மேற்கில்) சுமார் 40 கி.மீ தூரத்திலுள்ளது. கோயில் வாசலிலேயே இறங்கலாம். வேறு வசதிகள் இல்லை.

மூலவர் : லக்ஷ்மீ வராஹப் பெருமாள், நின்ற திருக்கோலம்

63) திருக்கடல்மல்லை
(மஹாபலிபுர க்ஷேத்ரம் அர்த்த சேது)

சென்னையிலிருந்து 55கி.மீ. தூரத்திலும், திருவிடவெந்தையிலிருந்து சுமார் 15கி.மீ. க்கு அப்பாலும் உள்ளது. கிழக்கு கடற்கரை சாலை. பழைய மஹாபலிபுரம் ரோடு இரண்டிலுமே பஸ் வசதியும் ஊரில் மற்றும் வசதிகளும் உண்டு.

மூலவர் : ஸ்தலசயனப் பெருமாள், சயனத் திருக்கோலம்

64) திருக்கடிகை (சோளிங்கபுரம்)

சென்னை-பெங்களூர் ரயில் மார்க்கம், அரக்கோணத்திலிருந்து சுமார் 27கி.மீ. வாலாஜாப்பேட்டையிலிருந்து சுமார் 23கி.மீ. பஸ்ஸில் வரலம். அதே போல் திருத்தணியிலிருந்தும், சித்தூரிலிருந்தும் பஸ்ஸில் வரலாம்.

மூலவர் : யோக நரஸிம்ஹர், வீற்றிருந்த திருக்கோலம்

வடநாட்டுத் திருப்பதிகள் – 11

65] திருவயோத்தி [அயோத்யா]

மொகல்சராய் (காசி–வாராணஸி) லக்னௌ ரயில் மார்க்கத்தில் பைசாபாத் ஸ்டேஷனிலிருந்து வண்டியில் போக வேண்டும். அங்கிருந்து அயோத்தி சுமார் 5 கி.மீ. உள்ளது. இவ்வூரில் தங்குதவதற்கு பல சத்திரங்களும் சாப்பாட்டுக் கடைகளும் உள்ளன.

மூலவர் : ஸ்ரீராமன், சக்கரவர்த்தித் திருமகன், வீற்றிருந்த திருக்கோலம்

66] திருநைமிசாரண்யம்

கல்கத்தா – டேராடூன் ரயில் மார்க்கத்தில் பாலமாவ் ஜங்ஷன்வந்து அங்கிருந்து சீதாப்பூர் போகும் கிளை ரயிலில் ஏறி வழியிலுள்ள நைமிசாரண்யா ஸ்டேஷனில் இறங்கி 4 கி.மீ. தூரம் வண்டியில் அல்லது நடந்து சென்று இவ்வூரை அடையலாம். தில்லி–லக்னோ ரயில் பாதையில் ஹர்தோய் என்ற ஸ்டேஷனில் இறங்கியும் இவ்வூரை அடையலாம். அஹோபில மடமும் ஒரு ராமானுஜ கூடமும் தங்க வசதியளிக்கின்றன.

மூலவர் : தேவராஜன் (ஸ்ரீஹரி), நின்ற திருக்கோலம்.

67] திருப்பிருதி [ஜோஷிமட் – நந்தப்ரயாக்]

ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஜோஷிமட் என்ற இடந்தான் திருப்பிருதி என்பது பொதுவான அபிப்ராயம். ஹரித்வாரிலிருந்து 246 கி.மீ.

மூல்வர் : பரமபுருஷன், புஜங்கசயனம்

68] திருக்கண்டமென்னும் கடிநகர் [தேவப்ரயாகை]

ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் 70 கி.மீ. தூரத்திலும், ஹரித்வராரத்திலிருந்து பத்ரிக்குச் செல்லும் மார்க்கத்தில் 80 கி.மீ.லும் உள்ளது. பத்ரியிலிருந்து திரும்புகையில் இறங்கி ஸேவித்துவிட்டு அடுத்த பஸ்ஸில் வரலாம். ரகுநாத்ஜீ மந்திர் என்றால் தெரியும்.

மூலவர் : நீலமேகப்பெருமாள், நின்ற திருக்கோலம்

69] திருவதரியாச்ரமம் [பத்ரிநாத்]

டெல்லியிலிருந்து ஸஹாரன்பூர், லக்ஸார் வழியாக அல்லது கல்கத்தா – டேராடூன் எக்ஸ்பிரஸில் ஹரித்வார் ஸ்டேஷனுக்கு வந்து அங்கிருந்து ரிஷிகேசில் தங்கி, அங்கிருந்து 300 கி.மீ. பஸ்ஸில் ஹிமாலய மலையில் பிரயாணம் செய்து, பத்ரிநாத்தை அடைய வேண்டும். இங்கு ஏராளமான சத்திரங்களம் பல வசதிகளும் உண்டு.

மூலவர் : பத்ரி நாராயணன், வீற்றிருந்த திருக்கோலம்

70] திருச்சாளக்ராமம் [ஸாளக்ராமம் முக்திநாத்]

இந்த திவ்ய தேசம் நேபாள நாட்டில் உள்ளது. இந்திய எல்லையைக் கடப்பதற்கு ஸனோலி, ராக்ஸால் என்ற இரண்டிடங்கள் தான் சிறப்பானவை.

போகும் வழியில் எங்கும் தங்குமிடமோ, உணவு வசதிகளோ கிடையாது. மலையேறுபவர்கள் சொந்த வசதிகளுடனே கூட்டமாகச் செல்லவேண்டும். போக்ராவிலிருந்து 1 மணி நேரத்தில் ஹெலிகாப்டர் மூலம் அடையலாம்.

மூலவர் : ஸ்ரீமூர்த்தி, முக்தி நாராயணன், நின்ற திருக்கோலம்

71] திரு வடமதுரை [மதுரா]
[ப்ருந்தாவனம், கோவர்த்தனம் அடங்கியது]

டெல்லியிலிருந்து ஆக்ரா போகும் ரயில் பாதையில் மதுரை என்ற ஜங்ஷனிலிருந்து சுமார் 3 கி.மீ தூரத்தில் ஊரும் கோயில்களும் உள்ளன. இங்கு தங்கும் வசதிகள் இல்லாததால் 10 கி.மீ தூரத்திலுள்ள பிருந்தாவனம் என்ற ஊரில் தங்கிக் கொள்ளலாம்.

மூலவர் : கோவர்த்தநேசன், நின்ற திருக்கோலம்

72] திருவாய்ப்பாடி [கோகுலம், கோகுல்]

மதுரா ஜங்ஷனிலிருந்து வண்டி பிடித்துக்கொண்டு 41/2 கி.மீ தூரமுள்ள யமுனைப் பாலத்தைக் கடந்து அங்கிருந்து 71/2 கி.மீ. பஸ்ஸில் சென்று இவ்வூரை அடையலாம். வசதிகள் ஒன்றுமில்லை.

மூலவர் : மனமோஹன கிருஷ்ணன், நின்ற திருக்கோலம்

73] திருத்வாரகை [துவரை, துவாரபதி]

பம்பாய், ஆமதாபாத், வீரம்காம், ராஜ்கோட், ஜாம்நகர் வழியாக ஓகா துறைமுகம் செல்லும் ரயில் பாதையில் துறைமுகத்துக்கு சுமார் 32 கி.மீ. தூரத்தில் துவாரகா ரயில்வே ஸ்டேஷன் உள்ளது. அங்கிருந்து 4 கி.மீ. வண்டியில் போய், கோயிலை அடையலாம். வசதிகள் எல்லாம் உண்டு. ஆமதாபாத்திலிருந்தும் நேராக துவராகைக்கு பஸ்கள் செல்கின்றன.

மூலவர் : கல்யாண நாராயணன், நின்ற திருக்கோலம்

74] திருச்சிங்கவேள் குன்றம் [அஹோபிலம்]

சென்னை – பம்பாய் ரயில் பாதையிலுள்ள கடப்பா ஸ்டேஷனில் இறங்கி, அங்கிருந்து பஸ்ஸில் (பஸ் ஸ்டாண்டு 2 கி.மீ. தூரத்தில் உள்ளது) 85 கி.மீ. தூரம் சென்று அர்லகட்டா என்ற ஊரில் இறங்கி, அங்கிருந்து வேறு பஸ்ஸில் 1 மணி நேரத்தலி 25 கி.மீ தூரத்தில் உள்ள அஹோபிலம் போய்ச் சேரலாம். நந்தியாலில் இருந்து 65 கி.மீ ஹைதர்ரபாதிலிருந்து பஸ்ஸில் வரலாம். இவ்வூரில் திருப்பதி தேவஸ்தானத்தாரால் நடத்தப்படும் விடுதி ஒன்றும் உள்ளது.

மூலவர் : ப்ரஹ்லாதவரதன், வீற்றிருந்த திருக்கோலம்

75] திருவேங்கடம்
[திருப்பதி, திருமலை, ஆதிவராஹ க்ஷேத்ரம்]

சென்னை – பம்பாய் ரயில் பாதையிலுள்ள ரேணிகுண்டாவிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன் திருப்பதி சென்னையிலிருந்து நேராக வரும் ரயில் வண்டிகளும் உண்டு.

1] கீழ்த்திருப்பதி : கோவிந்தராஜப் பெருமாள் கோவில்.

மூலவர் : கோவிந்தராஜப்பெருமாள், புஜங்கசயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

2] *திருமலை*

மூலவர் : திருவேங்கடமுடையான், நின்ற திருக்கோலம்.

மலைநாட்டுத் திருப்பதிகள் – 13

பொதுவான குறிப்புகள்

இத்தலங்கள் வைணவத் தலங்களாயினும் போத்திகளால் பூஜை செய்யப்படுகின்றன. பிரஸாதமாக சந்தனம், துளசி மற்றும் புஷ்பம் முதலியவற்றையும் கைபடாமல் தருகின்றார்கள். பெருமாளை ஆழ்வார்கள் அழைத்த பெயர்களை விட்டு வேறு பெயரால் அழைப்பார்கள். பெரும்பாலும் தாயார் ஸந்நிதிகளே கிடையாது. திருவல்லவாவில் விபூதி ப்ரஸாதம் கூடக் கொடுக்கிறார்கள். மஹாராஜாக்கள் உள்பட பெரிய மனிதர்கள் – சிறிய மனிதர்கள் என்கிற பாகுபாடின்றி வேஷ்டியும் துண்டும் அணிந்துதான் செல்லுகிறார்கள். சில கோயில்களில் கடைகளில் வேஷ்டிகள் வாடகைக்குக் கொடுக்கிறார்கள். கோயில்களை மிகவும் தூய்மையாய் வைத்திருக்கிறார்கள்.

76] திருநாவாய்

சென்னை – கள்ளிக்கோட்டை ரயில் மார்க்கத்தில் உள்ள இந்த ஸ்டேஷனிலிருந்து ஊரும் கோயிலும் 2 கி.மீ. தூரத்தில் உள்ளன. ஷோரனூரிலிருந்து பஸ்ஸில் குட்டீபுரம் வந்து அங்கிருந்து வேறு பஸ்ஸில் திருநாவாய் வந்ததும் கோயிலை அடையலாம். சிறிய ஊர். வசதிகள் கிடையாது.

மூலவர் : நாவாய் முகுந்தன், நின்ற திருக்கோலம்

77] திருவித்துவக்கோடு
[திருவிச்சிக்கோடு, திருவிஞ்சிக்கோடு]

ஷோரனூர் – கள்ளிக்கோட்டை மார்க்கத்தில் பட்டாம்பி ரயில் நிலையத்திலருந்து 3 கி.மீ. தூரம். ஷோரானூரிலிருந்து குருவாயூர் போகும் பஸ்ஸில் 15 கி.மீ. தூரம் சென்று இறங்கி ஒரு குறுகிய சாலையில் 2 கி.மீ. நடக்க வேண்டும்

மூலவர் : உய்யவந்த பெருமாள், நின்ற திருக்கோலம்.

78] திருக்காட்கரை [த்ரிக்காக்கரா]

ஆலவாய்–திருச்சூர் ரயில் மார்க்கத்தில் இருஞாலக்கொடி (இரிஞ்சாலக்குடா) ஸ்டேஷனிலிருந்தும் அங்கமாலி ஸ்டேஷனிலிருந்தும் வடகிழக்கே சுமார் 15 கி.மீ தூரத்திலிருக்கிறது. ஆலவாய் போகும் பாதையில் 7 கி.மீ சென்று, அங்கிருந்து வேறு பஸ்ஸில் ஒரு கிளைப்பாதையில் போக வேண்டும். கொச்சி, எர்ணாகுளத்தில் தங்கிப் போகலாம்.

மூலவர் : காட்கரையப்பன், நின்ற திருக்கோலம்.

79] திருமூழிக்களம் [மூழிக்களம்]

ஆல்வாய் டவுனில் தங்கி அங்கிருந்து பஸ் ஏறி திருமூழிக்களம் வரலாம். சாலையிலிருந்து சற்று தூரத்தில் பாரதப்புழை ஆற்றங்கரையில் கோயில் உள்ளது. அங்கமாலி ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும் இங்கு

பஸ்ஸில் வரலாம். இங்கு வசதிகள் எதுவும் இல்லை.

மூலவர் : திருமூழிக்களத்தான், நின்ற திருக்கோலம்

80] திருவல்லவாழ் [திருவள்ளலா ஸ்ரீ வல்லப க்ஷேத்ரம்]

கொல்லம் – எர்ணாகுளம் ரயில் மார்க்கத்தில் திருவல்லா ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ தூரம். பஸ் வசதிகளும் உள்ளது. திருவல்லாவில் சத்திரம் இருக்கிறது. எண் 80 முதல் 85 வரை உள்ள ஆறு க்ஷேத்திரங்களையும் ஸேவிக்கலாம்.

மூலவர் : கோலப்பிரான், நின்றக் கோலம்

81] திருக்கடித்தானம்

திருவல்லாவிலிருந்து கோட்டயம் சாலையில் 8 கி.மீ. பஸ்ஸில் சென்று, செங்கணச்சேரியில் இறங்கி, அங்கிருந்து வேறு சாலையில் கிழக்கே இரண்டு மைல் சென்று இவ்வூரை அடையலாம். இங்கு வசதி ஒன்றும் கிடையாது.

மூலவர் : அத்புத நாராயணன், நின்ற திருக்கோலம்

82] திருச்செங்குன்றூர் [திருச்சிற்றாறு]

திருவனந்தபுரத்திலிருந்து கொல்லம் வழியாக எர்ணாகுளம் செல்லும் ரயில் பாதையில் செங்கண்ணூர் ஸ்டேஷன் இருக்கிறது. திருவல்லாவிலிருந்து தெற்கே 10 கி.மீ.

மூலவர் : இமையவரப்பன், நின்ற திருக்கோலம்

83] திருப்புலியூர் [குட்ட நாடு]

செங்கண்ணூரிலிருந்து (மார்க்கம் 82 காண்க) மேற்கே 5 கி.மீ. தூரத்திலுள்ளது. வண்டியில் போகலாம். பஸ் வெகு அரிதாகப் போகிறது. வசதி ஒன்றுமில்லை.

மூலவர் : மாயப்பிரான், நின்ற திருக்கோலம்

84] திருவாறன்விளை [ஆரம்முளா]

செங்கண்ணூரிலிருந்து கிழக்கே 9 கி.மீ. பஸ்ஸில் போகலாம். வசதிகள் குறைவு. ஆனால் தேவஸ்தான சத்திரம் இருக்கிறது.

மூலவர் : திருக்குறளப்பன், நின்ற திருக்கோலம்

85] திருவண்வண்டூர் [திருவமுண்டூர்]

ஷோரனூர் – கள்ளிக்கோட்டை மார்க்கத்தில் பட்டாம்பி ரயில் நிலையத்திலருந்து 3 கி.மீ. தூரம். ஷோரானூரிலிருந்து குருவாயூர் போகும் பஸ்ஸில் 15 கி.மீ. தூரம் சென்று இறங்கி ஒரு குறுகிய சாலையில் 2 கி.மீ. நடக்க வேண்டும்

மூலவர் : பாம்பணையப்பன், நின்ற திருக்கோலம்

86] திருவனந்தபுரம்

சென்னை – திருவனந்தபுரம் ரயில் மார்க்கத்தில் திருவனந்தபுரம் ஹென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரத்தில் கோயில் இருக்கிறது.

மூலவர் : அநந்தபத்மநாபன், புஜங்கசயனம்

87] திருவாட்டாறு

திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோயில் போகும் பஸ்ஸில் சென்று தொடுவெட்டி என்ற இடத்தில் இறங்கி அங்கிருந்து வேறு பஸ்ஸல் 9 கி.மீ. சென்று இவ்வூரை அடைய வேண்டும். திருவனந்தபுரம் – கன்னியாகுமரி ரயில் பாதையில் உள்ளது.

மூலவர் : ஆதிகேசவப் பெருமாள், புஜங்கசயனம்.

88] திருவண்பரிசாரம் [திருப்பதிசாரம்]

திருவாட்டாற்றிலிருந்து தொடுவெட்டி வந்து, பஸ் மாறி, நாகர்கோவில் – திருநெல்வேலி பஸ் மார்க்கத்தில் நாகர்கோவில் வந்து, அங்கிருந்து 4 கி.மீ. தூரம் வடக்கே சென்று இவ்வூரை அடைய வேண்டும்.

மூலவர் : திருக்குறளப்பன், வீற்றிருந்த திருக்கோலம்

89] திருக்குறுங்குடி [வாமன க்ஷேத்ரம்]

திருநெல்வேலியிலிருந்து நேர் பஸ் வசதியுள்ளது (அல்லது) திருநெல்வேலியிலிருந்து 25 கி.மீ. நாங்குனேரிக்கு பஸ்ஸில் வந்துஅங்கிருந்து வேறு பஸ்ஸில் 12 கி.மீ. கடந்து இங்கு வரலாம். இவ்வூரில் ராமாநுஜ கூடங்களும் மடங்களும் உள்ளன.

மூலவர் : நின்ற நம்பி, நின்ற திருக்கோலம்

90] திருச்சிரீவரமங்கை
[திருச்சிரீவரமங்கல நகர், வானமாமலை, நாங்குனேரி, தோதாத்ரி க்ஷேத்ரம்]

திருநெல்வேலியிலிருந்து திருக்குறுங்குடி வரும் வழியில் நாங்குனேரியில் இறங்கியோ அல்லது திருக்குறுங்குடியிலிருந்து திரும்புகையிலோ பெருமாளை ஸேவிக்கலாம்.

மூலவர் : தோதாத்ரிநாதன் (வானமாமலை) வீற்றிருந்த திருக்கோலம்

91 முதல் 98 வரை நவதிருப்பதி திருத்தலங்களுக்கு விரிவான ஸ்தல புராணமும் 2ம் பக்கம் முதல் 13ம் பக்கம் வரை தெளிவாக விவரித்துள்ளோம்.

99] திருவில்லிபுத்தூர் [ஸ்ரீவில்லிபுத்தூர்]

தென்காசி – விருதுநகர் ரயில் பாதையில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷனிலிருந்து இப்பெரிய ஊர் 2–3 கி.மீ. தூரத்திலுள்ளது.

மூலவர் : வடபத்ரசாயீ (ரங்கமன்னார்), புஜங்கசயனம்

100] திருத்தண்கால் [திருத்தண்காலூர்]

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்தும் விருதுநகரிலிருந்தும் இங்கு பஸ்ஸில் வரலாம். திருத்தண்கால் ரயில்வே நிலையம் விருதுநகர் – தென்காசி ரயில் பாதையில் உள்ளது. சிவகாசியிலிருந்தும் வரலாம்.

மூலவர் : நின்ற நாராயணன், கிழக்கே திருமுக மண்டலம்

101] திருக்கூடல் [கூடலழகர் ஸந்நிதி – மதுரை]

மதுரை ஊருக்குள்ளே பஸ் ஸ்டாண்டு அருகாமையில் கூடலழகர் ஸந்நிதி உள்ளது.

மூலவர் : கூடலழகர், வீற்றிருந்த திருக்கோலம்

102] திருமாலிருஞ்சோலை [அழகர் கோயில்]

மதுரையிலிருந்து 17–18 கி.மீ. பஸ்ஸில் போக வேண்டும். மதுரையில் தங்கியே ஸேவிக்கலாம்.

மூலவர் : அழகர், கள்ளழகர், நின்ற திருக்கோலம்

103] திருமோகூர்

மதுரை பெரியார் பஸ் நிலையத்திலிருந்து டவுன் பஸ்கள் பல நேராக திருமோகூருக்குப் போகின்றன.

மூலவர் : காளமேகப் பெருமாள், நின்ற திருக்கோலம்

104] திருக்கோட்டியூர் [கோஷ்டி க்ஷேத்ரம்]

மதுரையிலிருந்து பஸ்ஸில் திருப்பத்தூரையடைந்து அங்கிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ள திருக்கோட்டியூருக்கு சிவகங்கை பஸ்ஸில் செல்ல வேண்டும்.

மூலவர் : உரகமெல்லணையான், புஜங்கசயனம்

105] திருப்புல்லாணி [ராமநாதபுரம் – தர்ப்பசயனம்]

காரைக்குடியிலிருந்து ராமநாதபுரத்துக்கு நேராக பஸ்ஸில் வரலாம். அங்கிருந்து திருப்புல்லாணிக்கு பஸ்ஸில் போகலாம். சேதுக்கரை பஸ்ஸல் போய் ஆதிஸேது என்ற இடத்தில் இறங்கி ஸமுத்ரஸ்நானம் செய்துவிட்டு திரும்பி பஸ்ஸில் 5 கி.மீ. வந்து திருப்புல்லாணி கோயிலை அடையலாம்.

மூலவர் : கல்யாண ஜகந்நாதன் (தெய்வச் சிலையார்) நின்ற திருக்கோலம்

106] திருமெய்யம்

புதுக்கோட்டைக்கும், காரைக்குடிக்கும் மத்தியிலிருக்கும் ரயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷனிலிருந்து கோவில் 1 மைல் தூரம். வசதிகள் நன்றாக இல்லை.

மூலவர் : ஸத்யகிரிநாதன், நின்ற திருக்கோலம்.

107] திருப்பாற்கடல் [வ்யூஹம்]

இங்கு இந்த ப்ராக்ருத சரீரத்துடன் போக முடியாது. நில உலகில் கண்ணால் பார்க்க முடியாது.

மூலவர் : க்ஷீராப்தி நாதன் (வ்யூஹ நிலை), ஆதிசேஷ சயனம்.

108] திருப்பரமபதம் [ஸ்ரீவைகுண்டம், திருநாடு, பரம்]

இது பூலோகத்தில் இல்லை. இது வைஷ்ணவர்களின் லக்ஷ்யமான மோக்ஷ நிலையாகும்.

மூலவர் : பரமபத நாதன், வீற்றிருந்த திருக்கோலம்

108 திவ்விய தேச பரமாத்மனைப் பாடிய பன்னிரு ஆழ்வார்களின் ஸ்தலங்கள் மற்றும் பெயர்கள், அவதரித்த நட்சத்திரங்கள்

ஆழ்வார்கள்	திருத்தலங்கள்	திருநக்ஷத்திரம்
1) பொய்கையாழ்வார்	திருவெஃகா, காஞ்சி	ஐப்பசி – திருவோணம்
2) பூதத்தாழ்வார்	கடல்மல்லை	ஐப்பசி – அவிட்டம்
3) பேயாழ்வார்	திருமயிலை	ஐப்பசி – சதயம்
4) திருமழிசையாழ்வார்	திருமழிசை	தை – மகம்
5) நம்மாழ்வார்	ஆழ்வார் திருநகரி (நவதிருப்பதி)	வைகாசி – விசாகம்
6) மதுரகவியாழ்வார்	திருக்கோளூர் (நவதிருப்பதி)	சித்திரை – சித்திரை
7) குலசேகரயாழ்வார்	திருவஞ்சிக்களம்	மாசி — புனர்பூசம்
8) பெரியாழ்வார்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆனி – ஸ்வாதி
9) ஆண்டாள்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆடி – பூரம்
10) தொண்டரடிப் பொடியாழ்வார்	திருமண்டலங்குடி	மார்கழி – கேட்டை
11) திருப்பாணாழ்வார்	உறையூர்	கார்த்திகை – ரோஹிணி
12) குமுதவல்லி ஸமேத திருமங்கையாழ்வார்	திருநகரி (திருவாலி)	கார்த்திகை – க்ருத்திகை

NAVAKAYLAYA THIRUTHALANGAL (Thoothukudi - Tirunelveli District)

Sl. No.	Place	Swami	Ambal	Opening Time
1.	Papanasam	Sri Kailasanathar	Sri Ulagambigai	9.30 A.M. - 12.30 P.M. 5.00 P.M. - 7.00 P.M.
2.	Cheranmahadevi	Sri Ammainathar	Sri Avudainayagi	8.00 A.M. - 10.00 A.M. 4.00 P.M. - 5.30 P.M.
3.	Kodaganallur	Sri Kailasanathar	Sri Sivagami	7.30 A.M. - 10.00 A.M. 5.00 P.M. - 7.00 P.M.
4.	Kunnathoor	Sri Kotha Parameshwarar	Sri Sivagami	7.30 A.M. - 10.00 A.M. 5.00 P.M. - 7.00 P.M.
5.	Murappanadu	Sri Kailasanathar	Sri Sivagami	8.00 A.M. - 10.00 A.M. 5.00 P.M. - 7.00 P.M.
6.	Srivaikuntam	Sri Kailasanathar	Sri Sivagami	6.00 A.M. - 10.00 A.M. 5.00 P.M. - 8.00 P.M.
7.	Thenthiruperai	Sri Kailasanathar	Sri Azhagiya Ponnammai	7.00 A.M. - 10.00 A.M. 5.00 P.M. - 7.00 P.M.
8.	Rajapathi	Sri Kailasanathar	Sri Azhagiya Ponnammai	7.30 A.M. - 12.00 P.M. 4.30 P.M. - 8.00 P.M.
9.	Sernthapoomangalam	Sri Kailasanathar	Sri Sowntharyanayagi	7.00 A.M. - 9.00 A.M. 5.30 P.M. - 6.30 P.M.



அருள்மிகு கள்ளபிரான் (சூரியன்) திருவைகுண்டம்